# இறையியல் கோலங்கள்

*காலாண்டு வெளியீடு*

# Irai Iyal Kolangal

## TAMIL THEOLOGICAL QUARTERLY

வடிவம் : 12

வண்ணம் : 01

பங்குனி, 1999

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை

ஆசிரியர் :

அருட்திரு ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள் :

அருட்திரு ச. வி. ப. மங்களராஜா
அருட்சகோ. செ. வசந்தகுமார்
அருட்சகோ. செ. எ. றொஷான்
அருட்சகோ. சி. லியோ ஆம்ஸ்ரோங்
அருட்சகோ. தே ரவிராஜ்

விநியோகம் :

அருட்சகோ. செ. றோய் பேடினன்ட்
அருட்சகோ. ம. பத்திநாதர்

வெளியீடு :

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
( தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும் )

*EDITOR :*

*REV. FR. J. NICHOLAS*

*SUB EDITORS :*

*REV. FR. S. V. B. MANGALARAJAH*
*BRO. S. VASANTHAKUMAR*
*BRO S. A. ROSHAN*
*BRO. S LEO ARMSTRONG*
*BRO. T. RAVIRAJ*

*DISTRIBUTION :*

*BRO. S. ROY FERDINAND*
*BRO. M. PATHINATHAR*

*PUBLICATION :*

*ST. FRANCIS XAVIER'S SEMINARY*
*COLUMBUTHURAI,*
*JAFFNA,*
*SRI LANKA.*
*( For private ciruculation only )*

# பொருளடக்கம்


பக்கம்

★ ஆசிரியர் உரை

1. பாஸ்காவும் மனித மாண்பும் 1
அருட்திரு ஜே. நீக்கிலஸ்

2. யூபிலி ஆண்டும் மனமாற்றமும் 7
செல்வி வயலற் இம்மானுவேல்

3. மறைவாவுழ்க் கல்வியும்
விசுவாச வளர்ச்சியும் 15
அருட்சகோதரி லூமினா போல்ராஜா

4. குடும்பம் ஒரு அன்புச் சமூகம் 25
அருட்சகோ. செ. வசந்தகுமார்

5. புனித பவுலும் அன்பிய வாழ்வும் 33
அருட்சகோ. ம. ம. ஞானேந்திரன்

6. யாழ் மறைமாவட்ட மேய்ப்புப் பணி
மாநாட்டின் இலக்கும் அதன் தாக்கங்களும் 43
திரு. ஏ. எஸ். அகஸ்டின்

7. Synopsis 52

# யூபிலி ஆண்டு நோக்கிய பயணம்

''தந்தையையும் அவரது அன்பையும் பற்றிய மறைபொருளை வெளிப்படுத்துவதன் மூலம் கிறிஸ்து மனிதனை மனிதனுக்கே முழுமையாக வெளிப்படுத்தி அவனது உன்னத அழைப்பை தெளிவுபடுத்துகிறார்.'' என்பதைக் கருத்திற் கொள்கையில், மூன்றாவது ஆயத்த ஆண்டிலே, இரு கடப்பாடுகள் ஒரு விசேட விதத்தில் சிறப்புப் பண்பாய் அமைந்திருக்கவேண்டும். அவையாவன சமயச்சார்பின்மையின் சவாலை ஏற்பதும் முக்கிய மதங்களுடனான உரையாடலும் ஆகும்.

இவற்றுள் முதலாவது தொடர்பாக, குறிப்பாக மேலைநாடுகளில் தோன்றியிருக்கும் நாகரிக நெருக்கடி என்னும் பரந்த விடயம் குறித்து உரையாடல் ஆரம்பிக்க இது தகுந்த நேரமாகும். மேற்குலகு தொழில் நுட்பரீதியில் மிகுந்த வளர்ச்சி பெற்றிருந்தபோதிலும், இறைவனை மறந்துவிடும் அல்லது மட்டத்தில் வைத்திருக்கும் போக்கினால் உள்ளார்ந்த விதத்தில் வறுமையுற்றிருக்கின்றது. யேசுவில் முழுநிறைவு பெற்ற அமைதி ஒருமைப்பாடு, நீதி சுதந்திரம் ஆகிய அனைத்துலக மதிப்பீடுகளின் மீது தாபிக்கப்பட்ட அன்பு நாகரீகத்தினாலேயே இந்த நாகரீக நெருக்கடி எதிர்க்கப்பட வேண்டும்.

மறுபுறத்தில், சமய உணர்வுத்துறையைப் பொறுத்தமட்டில், முக்கியமாக அண்மைப் பத்தாண்டுகளின் நிகழ்சிகளை நோக்குமிடத்து 2000த்துக்கு முந்திய ஆண்டு மதங்களுக்கிடையிலான உரையாடலுக்கு ஒரு பெரும் வாய்ப்பை அளிக்கும். இது ''கிறிஸதவமல்லாத மதங்களுடன் திருச்சபையின் உறவு (Nostra Actate) என்னும் அறிக்கையில் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூறியுள்ள திட்டவட்டமான வழிகாட்டுதல்களுக்கமைய அமைந்திருக்கும்.

இந்த உரையாடலில் யூதருக்கும் முஸ்லிம்களுக்கும் முன்னிடம் அளிக்கப்படவேண்டும். இந்த உட்கருத்தின் உறுதிப்பாடாக, ஒரு கடவுட் கொள்கையுடைய பெருஞ் சமயங்களுக்கு மதத்தொடர்பு வாய்ந்த இடங்களில் இணைந்த கூட்டங்கள் நடத்துவது சாத்தியமாகும்படிக்கு இறைவன் அருள்புரிவாராக.

இது தொடர்பாக, யூதர்களோடும், இஸ்லாம் மதத்தவர்களோடும் உரையாடலைப் பேணிவளர்ப்பதன் பொருட்டு பெத்லகேம், ஜெருசலேம், சீனாய்மலை போன்ற தனி முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கடந்தகால நிகழ்வுகளை நினைவுகூரும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு வழிவகுப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. அத்துடன் பிற இடங்களில் உலகப் பெரு மதங்களின் தலைவர்களுடன் இதுபோன்ற வேறு கூட்டங்களை நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்படுகின்றது. ஆயினும் தீங்குபயக்கும் தப்பெண்ணங்கள் ஏற்படாதபடிக்கு, சமரசப்பண்பையும் (Syncretism) இலகுவான, உண்மையற்ற அமைதி நோக்கத்தையும் (irenicism) தவிர்ப்பதில் எப்போதும் மிகவும் கவனம் எடுக்கப்படவேண்டும்.)

# எழுந்து என் தந்தையிடம் செல்வேன்

## முன்னுரை (Editorial)

மாபெரும் யூபிலி ஆண்டிற்கான இறுதி வருடத்தில் மிக முக்கிய மான கட்டமாகிய தவக்காலத்தில் இவ்விதழ் விரிகிறது. மலரும் ஆக்கங்கள் 'எழுந்து என் தந்தையிடம் செல்வேன்'... என்ற இவ்வருட கருப்பொருளை பல்வேறு வாழ்க்கை நிலைகளில், குறிப்பாக நமது சோதனையும், வேதனையும் நிறைந்த நிகழ்வுகள் ஊடாக, விவிலிய அடிப்படையில் நோக்கி, எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளையும் முன்வைக்கின்றன.

பாஸ்காவும் மனித மாண்பும் என்னும் கட்டுரை பழைய, புதிய ஏற்பாட்டு பின்னணிகளில் பாஸ்காவை நோக்கி பல்வேறு அடிமைத் தனங்களிலிருந்து மனிதன் விடுவிக்கப்பட்டு அவனது மாண்பு நிலை நாட்டப்படுவதையும், குறிப்பாக இக்காலகட்டத்தில் பல்வேறு துன்பங் கள் அடிமைத்தனங்களால் அல்லலுறும் மனிதனுக்கு கிறிஸ்துவின் பாஸ்கா நம்பிக்கையளிப்பதையும் எடுத்துரைக்கின்றது.

முதல் பாவம் அதன் விளைவுகள், மனம் திரும்புதலின் தேவையும் இறைவனின் அளவு கடந்த இரக்கமும், அதனை அடைய கிறிஸ்து வால் ஏற்படுத்தப்பட்ட ஒப்புரவு அருட்சாதனம் பற்றியும் பரந்தளவில் 'யூபிலி ஆண்டும் மன மாற்றமும்' என்ற கட்டுரை விவரிக்கின்றது.

விசுவாசமும் வாழ்வும் இவ்விரண்டையும் ஒன்றிணைக்கும் இறைமனித அனுபவங்கள், இவை அனைத்தையும் தொகுத்துத்தரும் மறை வாழ்வுக்கல்வி, பெற்ற இம்மறைவாழ்வுக்கல்வியை பிறரோடு பகிரவேண்டிய தேவை என்பவற்றை ஆதித்திருச்சபைக்கால நிகழ்வுக ளிலிருந்து இன்றுவரை ஆராய முயலுகின்றது 'மறைவாழ்வுக் கல்வியும் விசுவாச வளர்ச்சியும்' என்னும் கட்டுரை.

சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பம். எனவே யூபிலியை நோக்கிய பயணம் குடும்ப உறவுப் பயணத்திலே ஆரம்பிக்க வேண்டும். மூத்த முந்த குடும்பம் ஒரு அன்புச் சமூகமாகக் கட்டியெழுப்பப்பட்

டால் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் மறைந்து விடும். இவ்வுண்மைகளை 'குடும்பம் ஒரு அன்புச் சமூகம்' என்னும் கட்டுரை அலசுகின்றது.

அன்புச் சமூகம் - அன்பிய வாழ்வுக்கு முன் உதாரணம், எங்கு என்று தேடும் போது, முதலில் நம் கவனத்தை ஈர்ப்பது ஆதித்திருச் சபையில் பிரதிபலித்த அன்பிய வாழ்வாகும். அங்கு புனித பவுலின் பணியின் விளைவாக உருவான அன்பியச் சமூகங்கள் பற்றி நிறையத் தகவல்கள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. இவை பற்றிய ஒரு பார்வை 'புனித பவுலும் அன்பிய வாழ்வும்' என்னும் கட்டுரையில் உண்டு.

இறுதியில் இடம்பெறுவது ஒரு சுய ஆய்வு. யாழ் மறைவட்டத்தில் 'புதிய பெந்தக் கோஸ்தே' எனக் கட்டுரையில் சித்திரிக்கப்படும் 1994 ம் ஆண்டு கூட்டப்பட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டின் தீர்மானங்களை நாம் எந்தளவிற்கு முன்னெடுத்துச் சென்றிருக்கின்றோம் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. விவிலிய அடிப்படையிலும் திருச்சபையின் வரலாற்றிலும் அதிலும் குறிப்பாக 2 ம் வத்திக்கான் சங்க அடிப்படையிலும் காலத்தின் தேவைகளுக்கேற்ப ஒரு முக்கிய நிகழ்வாக இம்மகாநாடு காண்பிக்கப்பட்டுள்ளதுடன் இதன் வெற்றிக்கு நாம் செய்த, இன்னும் செய்ய வேண்டிய விடயங்களும் அலசப்படுகின்றன.

படித்து, சிந்தித்து, செயல்ப்படுவோம் - பயன் பெறுவோம்.

அருட்திரு. ச. வி. ப. மங்களராஜா.
இணை ஆசிரியர்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
28 - 03 - 1999

# பாஸ்காவும் மனித மாண்பும்

அருள்திரு ஜே. நீக்கிலஸ்
அதிபர்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## முன்னுரை

பாஸ்கா என்னும் பொருள் அடிக்கடி திருவழிபாட்டில் அல்லது மறைக்கல்வியில் தோன்றிநிற்பதொன்றாகும். பாஸ்கா என்னும் சொல் கடந்து செல்லுதல் என்ற பதத்தை பாரம்பரியமாக கொண்டுள்ளது. இது இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தோடு மிக நெருங்கியுள்ளது. எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து அவர்கள் செங்கடலை கடந்து சென்றதையும், மற்றும் பாலைவனப் பயணத்தையும் பாஸ்கா குறித்து நிற்கின்றது. வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை அடைந்த பின் ஆண்டுதோறும் பாஸ்கா விழாவை இஸ்ராயேல் மக்கள் நன்றிப் பெருக்கோடு கொண்டாடி வந்தனர். மேலும் இறைவனுடைய அரும் பெரும் செயல்களை நினைவு கூர்ந்து புகழ்ப்பா இசைத்தனர். குறிப்பாக தாம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதையும், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்பதையும் பெருமிதத்தோடு நினைவு கூர்ந்தனர். எனவே பாஸ்கா விழா என்பது சமய ரீதியாகவும், சமூக ரீதியாகவும் இஸ்ராயேல் மக்களின் வரலாற்றிலே ஓர் சிறப்பிடத்தைப் பெற்றுக் கொண்டது. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பாஸ்கா விழாவினால் மனித மாண்பு மேம்படுத்தப்பட்டு நிற்பதை சுட்டிக் காட்ட இக்கட்டுரை விழைகின்றது.

## பழைய ஏற்பாட்டில் பாஸ்கா விழா

இஸ்ராயேல் மக்கள் ஆரம்பத்தில் பாஸ்கா விழாவை ஒரு குடும்ப விழாவாக கொண்டாடினர். ஆண் பாலான ஒரு வயதுடைய செம்மறியின் இறைச்சியை உண்டார்கள். எகிப்து நாட்டிலே இஸ்ராயேல் மக்களின் தலைப்பேறு காப்பாற்றப்பட்டதன் நினைவாக செம்மறியை பலியாக்கினார்கள், (விடுதலைப் பயண நூல் 12:3-6). செம்மறியின் எலும்பு முறிபடக் கூடாது என்னும் கட்டளையை நுட்பமாக கடைப்பிடித்தனர் (விடுதலைப் பயண நூல் 12:46). செம்மறியில் மீதியானவற்றை எறிந்து விடாது சுட்டெரிக்கும்படி கூறப்பட்டது. அதன் இரத்தம் வீட்டு வாயிலின் முன் வைக்கப்பட்டது. (வி. ப. நூல் 12:7) அதன் இறைச்சி விரைவாக உண்ணப்பட்டது, பயணம் மேற்கொள்ள

இருந்ததால் அதனை விரைவாக உண்டார்கள். இவ்வாறு பாஸ்கா பயணத்திலே செம்மறியானது முக்கிய இடத்தை பெறுகின்றது. குறிப்பாக விடுதலையின் உணவாக அது கணிக்கப்பட்டு சடங்கு முறையிலே இந்த உணவு அருந்தப்பட்டது. இவ்வாறு இஸ்ராயேல் மக்களின் விடுதலையும் மனித மாண்பும் பாஸ்கா செம்மறியிலே மையமாகின்றது.

## பாஸ்காவும் புளியாத அப்பத் திருவிழாவும்

புளியாத அப்பம் விளைச்சலின் முதற் கனிகளோடு காணிக்கையாக்கப்பட்டதை லேவியராகமத்தில் காணலாம். (லேவி. 23; 5-14). ஆரம்பத்தில் புளியாத அப்பத் திருவிழா தனியான தொன்றாகவே கொண்டாடப்பட்டு வந்தது. காலப்போக்கில் பாஸ்கா விழாவுடன் இணைக்கப்பட்டது. பயணமாகின்ற வேளையிலே மாவு புளிக்கும் வரை காத்திருப்பது முடியாததொன்று. இஸ்ராயேல் மக்களும் மாவு புளிப்பதற்குமுன் விரைவாக புறப்பட வேண்டியிருந்தது (வி. ப. நூல் 12:34) பாஸ்கா என்பது ஒரு யாத்திரை; இந்த யாத்திரைக்கு ஊட்டமளிக்கும் உணவாக புளியாத அப்பம் உண்ணப்பட்டது. இந்த யாத்திரை ஓர் தொடர் பயணம் - அது கானான் தேசம் வரை நீடித்த பயணமாக அமைந்தது. இந்தப் பயணம் ஒரு விடுதலைப் பயணம், இறைவன் இஸ்ராயேல் மக்களை மீட்கும் பயணம். இது இஸ்ராயேல் மக்களுடைய மாண்பினை வெளிப்படுத்தும் ஒரு பயணம்.

## ஆலயத்தில் பாஸ்கா விழா

குடும்பமாக வீட்டிலே கொண்டாடப்பட்ட பாஸ்கா விழா காலப் போக்கிலே ஆலயத்திலே கொண்டாப்பட்டது. பாஸ்கா விழா சடங்கு முறையிலே வழிபாட்டு அமைப்பை பெற்றதால் ஆலயத்தில் கொண்டாடுவது பொருத்தமெனக் கருதப்பட்டது. முன்பு வீட்டுக்கதவின் முன் செம்மறியின் இரத்தம் பூசப்பட்டது. ஆனால் இப்போது இரத்தம் பீடத்தின்மேல் ஊற்றப்படுகின்றது. (2 ஆம் குறிப்பேட்டு நூல் 35:11). பாஸ்கா செம்மறி பீடத்தில் பலியாக்கப்படுவது புதிய செம்மறியாகிய கிறிஸ்துவுக்கு முன்குறியாக திகழ்கின்றது. இயேசுவை கடவுளின் செம்மறி என்று திருமுழுக்கு யோவான் அழைக்கின்றார். (யோவான் 1:29). இயேசுவின் இரத்தம் மீட்பின் அடையாளம். கல்வாரியில் சிந்தப்பட்ட அவரின் இரத்தம் மனுக்குலம் முழுவதையும் மீட்கும் சக்தி கொண்டது. கல்வாரிப்பலியின் நினைவாக இன்று திருப்பலியில் கிறிஸ்து இரத்தம் சிந்தாத பலியாக ஒப்புக் கொடுக்கப்படுகின்றார். அன்று இஸ்ராயேல் மக்களுடைய விடுதலையின் சின்னமாகிய பாஸ்கா செம்மறி இன்று கிறிஸ்துவாகிய புதிய செம்மறியிலே முழுமை

பெறுகின்றது. கிறிஸ்துவின் பாஸ்கா மனுக்குலம் முழுவதையும் பாவத்திலிருந்து விடுதலையாக்கி மீட்பின் பாதையிலே மாண்புறச் செய்கின்றது.

## பாஸ்கா விழாவின் இரு நிலைகள்

### I வரலாற்றுப் பாஸ்கா:

திருவழிபாட்டு ஆண்டிலே ஆண்டுதோறும் பாஸ்கா விழா மிகப் புனிதமாக கொண்டாடப்படுகின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதாவது, ''புனித அன்னையாம் திருச்சபை தன் தெய்விக மணமகனின் மீட்பு அலுவலை ஆண்டின் குறிப்பிட்ட நாட்களில் தூய்மையாய் நினைவில் கொணர்ந்து அதைக் கொண்டாட வேண்டுமென்று உணர்ந்துள்ளாள். ஒவ்வொரு வாரமும் ''ஆண்டவரின் நாள்'' என்று தான் அழைத்துள்ள நாளாகிய ஞாயிறன்று திருச்சபை ஆண்டவரின் உயிர்ப்பை நினைவில் கொணர்கின்றாள்; இவ்வுயிர்ப்பை ஆண்டுக்கு ஒரு முறை அவரது புனித பாடுகளுடன் ஒன்று சேர்த்து, விழாக்களுள் தலை சிறந்ததாகிய பாஸ்காப் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றாள்'' (திருவழிபாடு எண். 102). வரலாற்றில் நிகழ்ந்த பாஸ்கா வருடாந்த பாஸ்காவாக திருச்சபையால் கொண்டாடப்படுகின்றது. இந்த பாஸ்கா விழா எல்லா விழாக்களுக்கும் கொடு முடியாக மிகச் சிறப்புற்று விளங்குகிறது. நாற்பது நாட்களைக் கொண்ட தவக்கால ஆயத்தத்தோடு புனித வியாழன் மாலைத் திருப்பலியோடு ஆரம்பமாகின்ற பாஸ்கா விழா புனித சனிக்கிழமை திருவிழிப்போடு முடிவடைகின்றது. கிறிஸ்தவ வாழ்வு புத்துயிர் பெற்று புதுப்பிக்கப்பட பாஸ்கு விழா வழிவகுக்கின்றது. ஒரு கிறிஸ்தவன தன் வாழ்வைப் புனிதப்படுத்தி, விசுவாசத்தை ஆழமாக்கி உயிர்த்த கிறிஸ்துவின் சாட்சியாய் விளங்க பாஸ்கா விழா ஊற்றாய் அமைகின்றது.

### II அன்றாட வாழ்வில் பாஸ்கா:

கிறிஸ்தவ வாழ்வு அருட்சாதன வாழ்வு. இவ்வருட்சாதனங்களின் தொடக்கமும் மையமுமாக இருப்பது கிறிஸ்துவின் பாஸ்காவாகும். இந்த பாஸ்காவை அன்றாட வாழ்வில் அறிக்கையிட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கடமையுண்டு. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கூற்றுப்படி, "இறைமகன் தமது இறப்பாலும் உயிர்ப்பாலும் நம்மை பேயின் அதிகாரத்தில் இருந்தும் சாவின் நின்றும் மீட்டு தந்தையின் அரசிற்கு கொண்டு வந்தார் என்பதை பறைசாற்றுவதோடு நில்லாது. தாங்கள் பறைசாற்றிய நிறை வாழ்வுப் பணியை, திருவழிபாட்டு

வாழ்கை முழுவதையுமே உள்ளடக்கி நிற்கும் திருப்பலியாலும், அருள் அடையாளங்களாலும் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு திருமுழுக்கினால் மக்கள் பாஸ்கா மறை நிகழ்ச்சியில் புகுத்தப்படுகின்றனர் கிறிஸ்துவோடு இறந்து, அவரோடு புதைக்கப்பட்டு அவரோடு உயிர்த்தெழுகின்றனர்........" (திருவழிபாடு எண்—6). கிறிஸ்தவ வாழ்வு இவ்வுலகில் ஒரு போராட்டம். சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே, இறையருளுக்கும் பாவ இருளுக்கும் இடையே தீமைக்கும் நன்மைக்குமிடையே எழுகின்ற ஒரு போராட்டம். இப்போராட்டத்தில் எவரும் தனித்து நின்று வெற்றி கொள்ள முடியாது. கிறிஸ்து தமது புனித பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக மனிதனை விலங்கிடும் அடிமைத் தளங்களில் இருந்து அவனுக்கு விடுதலை அளித்தார். குறிப்பாக திருமுழுக்கு, பழைய பாவ வாழ்வு களையப்படுவதையும், புத்தொளி வீசும் புதுவாழ்வை பெறுதலையும் குறித்து நிற்கின்றது. திருமுழுக்கிலே தண்ணீர் புது வாழ்வை அளிக்கும் அடையாளமாகவும், ஒளியானது விசுவாச வாழ்வு கொண்ட விடுதலைப் பயணத்தையும் சுட்டி நிற்கின்றது. இவ்வாறு கிறிஸ்துவின் பாஸ்காவினால் கிறிஸ்தவ வாழ்வு நிறைவுள்ளதாகிறது.

## பாஸ்கா மனித மாண்பின் அடிப்படை

போரும் வன்முறைகளும் இன்றைய உலகிலே மலிந்து காணக் கிடக்கின்றன. மனித உயிர்களைவிட பணமும், பதவியும் மதிப்புடையனவாக மாறிவிட்டன. சிசுக் கொலைகளும் பாலியல் வன்முறைகளும் சாதாரண நிகழ்வுகளாக நடைபெறுகின்றன. கொலையும், கொள்ளையும் அன்றாட செய்திகளாக பிரசுரிக்கப்படுகின்றன. இவ்வாறு பல தீமைகள் தலைவிரித்தாடும் நவீன உலகிலே கிறிஸ்துவின் நற்செய்தி விழுமியங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. கிறிஸ்து மனுவுருவானது மனித மாண்பை மேம்படச் செய்யவே. கிறிஸ்துவின் நற்செய்தி அன்பை மையமாக் கொண்டுள்ளது. கிறிஸ்து ஆற்றிய புதுமைகள் முழுமனித விடுதலையை குறிக்கோளாக கொண்டிருந்தது. செவிடர் கேட்க்கவும், ஊமையர் பேசவும், முடவர் நடக்கவும், குருடர் பார்வை பெறவும், நோயாளிகள் குணம் பெறவும் இயேசு ஆற்றிய புதுமைகள் இறையரசின் வல்லமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. உடல்ரீதியாக மட்டுமல்ல உளரீதியாகவும் இயேசு குணமளிக்க வல்லவராக இருந்தார். கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டிய விபச்சாரப் பெண்ணுக்கு மன்னிப்பருளி அவளுக்கு புது வாழ்வை கொடுத்தது இயேசுவின் அளப்பெரிய வல்லமையாகும்.

மனுக்குலத்தின் முழுமையான விடுதலை கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளிலே நிறைவு பெறுகின்றது. ஒருமுறை மட்டும் நிறைவேறிய கிறிஸ்துவின் பாஸ்கா எக்காலத்துக்கும் பயனளிக்கும் ஆற்றலை கொண்டுள்ளது.

## பாஸ்காவும் ஆன்மீக வாழ்வும்

பழைய ஏற்பாட்டிலே விடுதலையை நோக்கி பாஸ்கா பயணம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடுதலைப்பயணம் அன்னிய ஆட்சியில் இருந்து மீட்பு பெறுவதோடு மட்டும் நின்றுவிடாமல் ''யாவே'' என்னும் உண்மை இறைவனை தேடி அனுபவிக்கும் ஒரு பயணமாகவும் இருந்தது. புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவின் பாஸ்கா ஒரு ஆன்மீகத் தேடலை குறித்து நிற்கின்றது. இயேசு ஜெருசலேமுக்கு பயணம் சென்றதும், கல்வாரி மலையை நோக்கி செய்த சிலுவைப்பயணமும் மனிதனுடைய ஆன்மீக தாகத்தை தீர்க்கும் பயணமாக அமைகின்றது. கிறிஸ்தவ வாழ்வு ஒரு ஆன்மீகத் தேடலாக அமைகின்றது. இந்தத்தேடல் திருமுழுக்கிலே ஆரம்பிக்கப்பட்டு இறுதி பயண உணவு பெறும் வரையும் நீடிக்கின்றது. கருங்கக் கூறின் அருட்சாதனங்கள் அனைத்தும் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வில் இடம் பெறும் ஆன்மீகத் தேடலுக்கு உந்து சக்திகளாக அமைகின்றன. அருட்சாதனங்கள் அனைத்தும் ஒருவனுடைய ஆன்மீக பயணத்திலே உயர ஏறிச் செல்லும் படிக்கற்களாக அமைகின்றன. ஆன்மீகத் தேடலின்றி ஒருவன் இறையன்பை சுவைக்க முடியாது. இந்த ஆன்மீகத்தேடல் ஒரு அடிப்படையான விடுதலை வாழ்வை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. உலகியல் அல்லது பொருளியல் வாழ்வில் இருந்தும், பல பொய்மைகளில் இருந்தும் கடந்து செல்லவும், உண்மை ஒளியாகிய இறைவனைத்தேடி செல்லும் பயணத்திலே கிறிஸ்துவின் பாஸ்கா உயிரூட்டம் அளிக்கும் உன்னத சக்தியாக திகழ்கின்றது. இவ்வாறு ஆன்மீக வாழ்வும், தேடலும் கிறிஸ்துவின் பாஸ்காவை மையமாகக் கொண்டுள்ளது.

## முடிவுரை

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் மனுக்குல மீட்பையே மையமாகக் கொண்டுள்ளன. இந்த மீட்பு என்பது ஒரு இறுதிக்கால நிகழ்வென்று கருதுவது தவறாகும். மீட்புப்பணி கிறிஸ்துவிலே நிறைவு பெற்றுவிட்டது. ஒரு கிறிஸ்தவனை பொறுத்தமட்டிலே மீட்பு என்பது இவ்வுலகிலே ஒரு பயணமாகத் திகழ்கின்றது. இந்த பயணத்தை பாஸ்காப் பயணம் என்று அழைக்கின்றோம். திருமுழுக்கிலே இந்தப் பாஸ்காப் பயணம் ஆரம்பிக்கின்றது. இவ்வுலகிலே நாம் ஓர் இடத்தை விட்டு இன்னோர் இடத்தை அடைவதற்கு கடந்து செல்ல வேண்டும். இதே போன்று எமது ஆன்மீகப் பயணத்திலும் தீமை என்னும் பாவ

நிலையில் இருந்து தூய்மை என்னும் இறைவனின் புனித நிலையை நோக்கி நாம் கடந்து செல்ல வேண்டியுள்ளது. கடந்து செல்லுதல் என்பது அனுதின வாழ்வில் நடைபெறும் ஒரு நிகழ்வு. செப, தப தியானங்கள், வழிபாடுகள், அருட்சாதனங்கள் அனைத்தும் அருள் வாழ்வு என்னும் புனிதமான புதுநிலைக்கு எம்மை கடத்திச் செல்கின்றன. நாளாந்தம் நாம் புத்துயிர் பெற்று கிறிஸ்துவிலே ஒரு புதுப் படைப்பாகிறோம். இவ்வாறு பாஸ்கா என்பது நாம் அன்றாடம் அனுபவிக்கும் ஒரு மறை பொருளாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இப்பாஸ்கா மறைபொருளிலே பங்கு கொண்டு அதனை தனதாக்கிக் கொள்ள அழைக்கப்படுகின்றான்.

பாவ அடிமை நிலையில் இருந்து விடுதலை பெறுவதற்கு பாஸ்காப் பயணம் இன்றியமையாததொன்று. அதேவேளையில் இந்தப் பயணம் கடினமானதொன்றாகவும் இருக்கின்றது. கிறிஸ்துவின் பாஸ்காப் பயணம் கல்லும் முள்ளும் நிறைந்த கல்வாரிப் பாதையூடாக அடிமையின் சின்னமாகிய சிலுவையை சுமந்து சென்ற ஒரு பயணம் மனுக்குலத்தின் பாவங்களையும், பாடுகள் வேதனைகளையும் இறைமகன் கிறிஸ்து தன்மீது சுமந்து சென்ற பயணம். துன்புறும் மக்களின் துயரத்திலே துணையாய் இருப்பது கிறிஸ்துவின் பாஸ்கா. சித்திரவதைகளுக்குள்ளாகி சிறையில் வாடும் மக்களுக்கு நம்பிக்கையை கொடுப்பது கிறிஸ்துவின் பாஸ்கா. போரின் இழப்புக்களினால் அவல நிலைக்குள்ளாகி அநாதைகளாக அலைந்து திரியும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பது கிறிஸ்துவின் பாஸ்கா. அடிமைத்தனத்திலும் அடக்குமுறையிலும் ஒடுக்கப்பட்டு உரிமை வாழ்விழந்து விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டிருப்போருக்கும் ஒளியின் கீற்றுக்களாய் விடுதலை உணர்வை கொடுப்பது கிறிஸ்துவின் பாஸ்கா. எனவே நாம் கொண்டாடும் பாஸ்கா விழா, விடிவை நோக்கி நாம் செல்லும் பயணத்திலே எமக்கு நம்பிக்கை உணர்வைக் கொடுத்து நாம் மனித மாண்பை பெறுவதுடன் பிறரும் மனித மாண்போடு வாழ்வதற்கு வழிசமைக்கும் என ஆசிக்கின்றோம்

## உசாத்துணை நூல்கள்

1) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு.
2) விவிலியக் களஞ்சியம்.
3) The New Dictionary of Theology.
4) Paul Puthanangady, Initiation to Christian Worship.

# யூபிலி ஆண்டும் மனமாற்றமும்

செல்வி வயலற் இம்மானுவேல்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இளைப்பாறிய ஆசிரியை திருக்குடும்ப
கன்னியர் மட மகாவித்தியாலயம்.)

## "எழுந்து என் தந்தையிடம் செல்வேன்

மாபெரும் யூபிலியான 2000 ஆம் ஆண்டின் விடியலை எதிர் நோக்கி இருக்கின்றோம். ஏனைய யூபிலிகளை விட இந்த யூபிலி யானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஏனெனில் ஒரு நூற்றாண்டின் நிறைவை மட்டுமல்லாது ஒரு சகாப்தத்தின் நிறைவையே குறிப்பதனால் இதற்கு ஒரு விஷேட பரிமாணம் உண்டு. திருச்சபைக்கு மட்டுமல்ல, சகல கிறிஸ்தவர்களுக்கும், ஏன் அனைத்து மக்களுக்குமே இந்த நிகழ்வு ஒரு மைல்க்கல்லாகும்.

திருச்சபையானது யூபிலிக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் இந்த இறுதியாண்டில் (1999) எமது சிந்தனைகள், "விண்ணையும், மண்ணையும் படைத்த கடவுளும், இயேசுவின் தந்தையும், எமது தந்தையுமான" இறைத் தந்தையை மையமாகக் கொண்டுள்ளன. கடந்த இரு ஆண்டுகளில் கிறிஸ்தவிலே நிலைபெற்றவர்களாய் தூய ஆவியினால் வழி நடத்தப்பட்டு, விண்ணகத் தந்தையை நோக்கிச் செல்ல இவ்வாண்டில் பிரவேசித்துள்ளோம். தந்தையின் இல்லத்தை அடைவதே இவ்வுலகப் பயணத்தின் இறுதி இலக்காகும்.

மனிதனின் உள்ளம் வாழ்விற்கு ஓர் அர்த்தத்தை சதா தேடிக் கொண்டேயிருக்கின்றது. அவன் இதயம் மகிழ்ச்சியைத் தேடுகின்றது. முழுமையான, முடிவில்லாத இன்பத்தைத் தேடுகின்றது ஆனால் உலகின் படைப்புப் பொருட்கள் எதிலும் அவன் முழு இன்பத்தைக் கண்டு கொள்ள முடிவதில்லை. புனித அகுஸ்தினார் கூறுவது போல், "இறைவனில் எமது உள்ளம் அமைதி காணும் வரை எமக்கு அமைதி கிடைப்பதில்லை" ஏனெனில் மனிதன் இறைவனுக்கென்றே படைக்கப்பட்டவன், ஆயினும் இதனை உணராது, கானல் நீரை நாடுவது போல வேறு அர்த்தங்களைத் தேடி அலைகின்றான். ஆனால் அவன் தேடலில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில் இறை வனும் அவனைத் தேடிக்கொண்டேயிருக்கின்றார். மனிதனோ கண் ணிருந்தும் குருடனாய், காதிருந்தும் செவிடனாய் இறைவனது பிர சன்னத்தை உணரமுடியாமலிருக்கின்றான். இன்றைய விஞ்ஞான

முன்னேற்றங்களும் தொழில்நுட்பத்துறையில் மனிதனது சாதனைகளும், அன்றாட வாழ்க்கையில் ஏராளமாகக் கிடைக்கும் அனுபோகப் பொருட்களும் ஆன்மீக உணர்வை மழுங்கச் செய்து விட்டன. ஆனால் மனிதனுடைய அறிவும், திறமையும், செயற்பாடுகளும் பயனற்றுப் போகும் போது, தன் இயலாமையையும், ஆற்றாமையையும் உணரும் போது இறைவனது உதவியை நாடிச் செல்கின்றான்.

## ஊதாரி மகன் உணர்த்தும் உண்மை

இந்த உண்மையைத்தான் காணாமற்போன மகன் உவமையின் மூலம் இயேசு விளக்குகின்றார். மனிதனின் பிரமாணிக்கமின்மையையும், இறைவனது விடாது தொடரும் அன்பையும் எடுத்துக் காட்டும் பகுதிகள் பரிசுத்த விவிலியத்தில் ஏராளமாக உண்டு. ஆனால் இந்த உவமையைப்போல் மிக எளிமையாகவும், தெளிவாகவும், உள்ளத்தைத் தொடும் படியாகவும் வேறெந்த இடத்திலும் கூறப்படவில்லையெனலாம். இதிற் கூறப்படும் மகன், தந்தையின் இல்லத்திலிருக்கும் வரை அவனுக்கு எந்தக் குறையுமிருக்கவில்லை. தந்தையுடையதெல்லாம் தன்னுடையதாக கருதக்கூடியதாக இருந்தது மட்டுமன்று தந்தையின் முழுமையான அன்பும் அவனுக்கிருந்தது. தந்தையின் அன்பில் மூழ்கித் திளைத்து இன்பமான ஒரு வாழ்வை அவன் அனுபவித்திருக்கலாம். ஆனால் ஏதேன் தோட்டத்தில் எமது ஆதிப் பெற்றோர் செய்தது போல, இல்லாததொன்றுக்கு ஆசைப்பட்டு இருந்ததை இழந்தான். முதிர்ச்சியற்ற அந்த இளைஞன் தந்தையிடமிருந்து விலகிச் சென்று, தன்னிஷ்டப்படி வாழ்ந்து, தன் கைப் பொருளையெல்லாம் இழந்த நிலையில் அவனுடைய வீழ்ச்சி அவன் கண்களைத் திறக்கின்றது. தான் இழந்து விட்ட அனைத்தையும் எண்ணி வருந்துகின்றான். தந்தையின் இல்லத்தின் மீது ஏக்கம் கொள்கிறான். மீண்டும் தந்தையிடம் சென்றால் அவர் தன்னை மகனாக ஏற்றுக்கொள்வாரோ என்ற ஐயம் தோன்றுகின்றது. மகனாகவிருக்க முடியாத தன் தாழ்நிலையை உணர்ந்திருப்பினும் ஒரு நம்பிக்கை ''எழுந்து தந்தையிடம் செல்வேன்'' என்று மனதில் உறுதி கொண்டு வீடு நோக்கிப் புறப்படுகின்றான்.

## மனந்திரும்ப அழைப்பு

இந்த ஊதாரிமகனுடைய கதை ஒவ்வொரு பாவியின் கதையுமாகும். இந்த உவமையின் முக்கிய பகுதி தந்தையின் செயற்பாடுதான். சொத்தை எடுத்துக்கொண்டு மகன் புறப்பட்டபோது தடுக்கவில்லை. அவனது சுதந்திரத்தை மறுக்கவில்லை. ஆனால் அவன் போனபின் வழிமேல் விழிவைத்து அவன் வரவிற்காகக் காத்திருக்கின்

றார். பாவியின் மட்டில் இறைவனது செயற்பாடும் இத்தகையதே. தங்கள் பாவத்தினால் தந்தையை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டு பாவ நிலையில் உள்ளவர்களும் இறைவனின் அழைப்பை செவிமடுக்க முடியும். உலகில் வாழும் வரை இந்த அழைப்பு அவனுக்கு வந்து கொண்டேயிருக்கின்றது. உளமாற்றத்திற்கான இந்த அழைப்பு இறை வனை மீண்டும் தந்தையாக ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கின்றது.

## தந்தையின் மாறா அன்பு

''தந்தை தன் மகனை மகனென ஏற்றுக்கொள்ளும் போது தான் முழுமையில் தந்தையாகின்றார். மகன் தன் தந்தையை இனம் கண்டு, அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்கு பிரதியன்பு செலுத்தும் போது தான் முழுமையில் மகனாகின்றான்'' என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். தந்தையிடமிருந்து விலகிச் சென்ற மகன் வீடு திரும்பி தந்தையின் அன்பை உணர்ந்த பின்னரே முதிர்ச்சி அடைந்தவனாக தந்தையை முழுமையாக ஏற்றுக் கொள்கிறான். ''அப்பா, இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்'' பிரிந்து சென் றமையால் மகனுக்குரிய உரிமையை இழந்தமைக்காக வருந்தியவன், இப்போது பொங்கிப் பிரவாகிக்கும் தந்தையின் அன்பைக் கண்டு இன்னும் ஆழமான விதத்தில் அவரோடு உறவு கொள்கின்றான். இறைத்தந்தை பாவிகளாகிய எம்மை ஏற்று அன்பு செய்துள்ளார். அவரது அன்பு அவரது சாயலான அவரது திருமகன் இயேசுவில் எமக்கு வெளிப்படுத்தப்பட்டது. (எபே. 1 : 5 – 6) இதற்குப் பிரதி யாக அவருக்கு அன்பு செய்வதே நாம் அவரைத் தந்தையாக ஏற்றுக் கொள்வதாகும்.

## பாவத்தின் விளைவு

ஆதிஆகம ஆசிரியர் ஆதாம் ஏவாள் வரலாற்றின் மூலம் மனிதன் அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்விற்காகப் படைக்கப்பட்டான் என்பதை உணர்த்துகின்றார். இறைவனோடு ஐக்கியமாகவிருந்து அதிலிருந்து கிடைக்கும் மகிழ்ச்சிக்காகப் படைக்கப்பட்டான். எமது ஆதிப்பெற்றோர் இறைவன் முன்னிலையில் அச்சமோ, வெட்கமோ, ஒளிவு மறைவோயின்றி அவரில் பூரண நம்பிக்கை கொண்டு நிம்மதி யாக வாழ்ந்தனர். ஆனால் பாவத்தின் காரணமாக இந்நிலை மாறியது. கடவுளுக்குப் பயம், அவர் முன்னிலையில் வர வெட்கம், ஒளிவு மறைவு எல்லாம் ஏற்படுகின்றன. பிறரிடமும் இவ்வாறே நம்பிக்கையிழந்து, அச்சமுற்று, பிளவுகளும் பிரிவினைகளும் உண்டாக ஏதுவாகின்றது. அன்பும், மகிழ்ச்சியும் இல்லாது போகின்றன.

## பாவ உணர்வின்மை

நாம் ஏன் பாவம் செய்கின்றோம்? என்ன பிழை செய்கின்றோம்? என்பது கூட பல சந்தர்ப்பங்களில் எம் கண்களுக்குத் தெரிவதில்லை. சில சந்தர்ப்பங்களில் நாம் செய்தது சரியென்றே சாதிக்கின்றோம். எமது ஆதிப் பெற்றோரைப் போல எமது தவறுகளை மறைக்க சாக்குப் போக்குச் சொல்கின்றோம். எமது செயல்களை நாமே நியாயப்படுத்திக் கொள்கின்றோம். அல்லது பிறர்மீது பழி சுமத்துகின்றோம். ''நீதான் அந்த மனிதன்'' என்று நாத்தான் இறைவாக்கினர் வந்து சுட்டிக்காட்டும் வரை தாவீது தன் பிழையை கருத்தில் கொள்ளாதிருந்தது போல் எமது பாவங்களின் கனாகனத்தை நாமும் உணராதிருக்கின்றோம்.

இன்று உலகில் பாவம் மலிந்துள்ளதை கண் கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. மனிதரின் மனச்சாட்சி சரியானபடி உருவாக்கப்படாமல் அல்லது மழுங்கிப்போய் அல்லது விகாரமடைந்து போயிருக்கின்றது. இத்தகைய மனச்சாட்சியுள்ள மனிதரை சாதாரணமாகக் காண்கின்றோம். இறைவனது கற்பனைப்படி சரியானது எது, பிழையானது எதுவென்றது சீர்தூக்கிப் பார்க்காமல் தங்கள் மனம் போன போக்கில், அல்லது தத்தம் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் வாழ்க்கை நடாத்துவது சகஜமாகிவிட்டது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் கூட இந்த விதமான மயக்கத்திலிருக்கின்றார்கள். உலகில் நன்மைத்தனம் நிலைநாட்டப்படவேண்டுமானால் கிறிஸ்தவர்கள் இம்மயக்க நிலையிலிருந்து விழிப்படைய வேண்டும். இறைவன் மிகுந்த இரக்கமுள்ளவர், அன்புள்ளவர் என்ற நம்பிக்கை எம் இதயத்தில் ஊட்டப்படுகின்றது. ஆனால் பாவம் உலகத்தின் பெரும் பகுதியைச் சூழ்ந்திருக்கின்றது. எமது வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

மனித பலவீனத்தினாலும் பாவம் செய்கின்றோம். மனக்காழ்ப்பினாலும் பாவம் செய்கின்றோம். அச்சத்தினாலும் பாவம் செய்கின்றோம். அகங்காரத்தினாலும் பாவம் செய்கின்றோம். சுயநலத்திற்காகத் தவறானவற்றை மனம் பொருந்தி திட்டமிட்டுச் செய்வது உண்டு. இது எவ்விதமிருப்பினும் பாவம் எம் அனைவரிடமும் உண்டு என்பது உண்மை.

இந்த யுகத்தில் மனிதன் தன் அறிவாற்றலால் ஒரு வியத்தகு விஞ்ஞான உலகைக் கட்டியெழுப்பியுள்ளான். ஆனால் அதே வேளையில் தனது பாவ அக்கிரமத்தினால் தனது சொந்தப் படைப்பிலேயே

சிக்குண்டு அதற்கு அடிமையாகிவிட்டான். மனிதனுடைய ஆட்சியில் ஒற்றுமை, ஒருமைப்பாடு இல்லை. முரண்பாடுகளும், போராட்டங்களும், பிளவுகளுமே மலிந்துள்ளன. இந்தப் பிளவுகள் பாவத்தின் விளைவால் ஏற்பட்டவையே. பாவம் மனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கின்றது. மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கின்றது ஏன்? மனிதன் தனக்குள்ளேயே பிளவுபட்டிருக்கின்றான். 2 ஆம் வத்திக்கான் சங்கப்பிதாக்கள் "இன்றைய உலகில் திருச்சபை" எனும் ஏட்டில் மனிதனைப்பற்றி பின்வருமாறு கூறியுள்ளனர் :

"வலுவற்றவனும் பாவியுமான அவன் அடிக்கடி தான் விரும்பாததைச் செய்கின்றான். செய்ய விரும்புவதை செய்யத் தவறுகிறான். தன்னிலே அவன் பிளவுபட்டிருக்கின்றான்" (இ. உ. தி. எண் 10). மனிதன் தன் பாவநிலையிலிருந்து விடுபட விரும்பினாலும் அவ்வாறு செய்ய இயலாதவனாக இருக்கின்றான்.

## இறைவனது இரக்கம்

இறைவனது அளவற்ற இரக்கம் மனிதனைத் தொடராதிருந்தால் தன் பாவநிலையிலிருந்து மனிதனால் மீளவே முடியாதிருந்திருக்கும். பாவநிலையிலிருக்கும் மனிதனுக்கு மனம் திரும்புதலுக்கான அழைப்பை அவர் தொடர்ந்து விடுத்துக்கொண்டேயிருக்கின்றார். தனது கீழ் நிலையையும், இயலாமையும் இறையருளின் துணையின்றி மீளமுடியாத நிலையும் உணரும் போது, மீண்டும் இறையருள்கிட்ட அவரிடம் தன்னை ஒப்படைக்கின்றான். பாவத்திலிருந்து விடுதலை பெற வழிவகைகளை அவர் அவனுக்கு அளிக்கின்றார். அனைவரும் மீட்கப்பட வேண்டுமென்பதே இறைவனது ஆவல். இதன் பொருட்டே விண்ணகத் தந்தை தம் திருமகனை உலகிற்கு அனுப்பிவைத்தார். உண்மையான உளமாற்றமும், ஆன்மீக புதுப்பித்தலும் தொடர்ந்து நடைபெறும் பொருட்டு வேண்டிய வழிவகைகளை ஏராளமாக வாரி வழங்குகின்றார்.

## உளமாற்றமும், மனஸ்தாபமும்

மனிதன் இறைவனோடு ஒப்புரவாகி மனித வாழ்வு சீர்பெற வேண்டுமானால் உளமாற்றம் இன்றியமையாததாகின்றது. உளமாற்றம் உள்ளத்தின் ஆழத்தில் ஆரம்பித்து, நாம் இறைவனோடும் அயலவரோடும் கொள்கின்ற உறவுகளில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இந்த உளமாற்றம் நற்செய்தி தரும் புதிய மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளவும், அந்த மதிப்பீடுகளைத் தந்த இறை

வனை அன்பு செய்யவும், அவரது திட்டப்படி ஒரு நீதியான, அமைதியான மனிதப் பண்புடைய சமுதாயத்தை உருவாக்குவதற்காக உழைக்கவும் எம்மைத் தூண்டும்.

பாவத்தின் விளைவுகளெல்லாம் சரி செய்யப்பட வேண்டுமெனில் முதலில் மனிதன்தானே குணமாக்கப்பட்டு இசைவு பெறவேண்டும். அவன் பாவமன்னிப்புப் பெறவேண்டும். அவன் பாவிகளை மன்னிப்பதற்கு இறைவன் என்றுமே தயாராயிருக்கின்றார் ஆகவே நாம் பாவிகளாயிருந்தபோதிலும் மனம் சோர்ந்து போவதோ, குற்ற உணர்வினால் நைந்து போவதோ அவசியமில்லை. எத்தகைய பாவியாக இருந்தாலும் நம்பிக்கைக்கு இடமில்லையென்று மனஞ் சோரத் தேவையில்லை. மாறாக அதே பாவங்கள் மனத்தாழ்ச்சியுடன் இறைவனை அணுக வழிசெய்யவேண்டும். ஆலயத்தில் செபிப்பதற்கு வந்த ஆயக்காரன் தனது பாவங்களை எண்ணி, ''ஆண்டவரே, பாவியான என்மேல் இரக்கம் வையும்'' என்றுதான் செபிக்கக் கூடியதாகவிருந்தது. தாழ்ச்சியோடு தனது பலவீனத்தையும் இறைவனது இரக்கத்தையும் அறிக்கையிட்டதால் அவன் நீதிமானாகத் திரும்பிச் சென்றானென்று இயேசு கூறுகின்றார். பிறர் முன்னிலையிலும், தனது சொந்த அபிப்பிராயத்திலும் தம்மை நீதிமான்களாகக் காட்டிக் கொள்ளாமல் நேர்மையுடனும் தாழ்ச்சியுடனும், தமது பலவீனத்தை ஏற்று, இறை இரக்கத்தை நாடுவோர் பாவத்திலிருந்து விடுவிக்கப் பெறுவது நிட்சயம். எம்மை மனஸ்தாபத்திற்கும், உளமாற்றத்திற்கும் தூண்டுவது இறைவன் எம்மிடத்தே கொண்டுள்ள அளவற்ற அன்பும், அவர் எப்போதும் மன்னிக்கச் சித்தமாயிருக்கின்றாரென்ற உணர்வுமே அவரை அடையவேண்டுமென்ற ஏக்கத்துடன் தொடர்ந்து முயற்சி செய்வோருக்கு பாவ மன்னிப்பையும், கிறிஸ்துநாதர் எமக்காக பெற்றுவைத்த அருட்செல்வங்களையும் வாரி வழங்கச் சித்தமாக இருக்கின்றார்.

## ஒப்புரவு அருட்சாதனம்

பாவமன்னிப்படைவதற்கு கிறிஸ்துநாதர் ஏற்படுத்திய ஓர் உன்னத வழி ஒப்புரவு அருட்சாதனமாகும். பாவங்களை மன்னிக்க திருச்சபைக்கு அதிகாரமளித்த கிறிஸ்து பாவப்பிணியிலிருந்து குணமடைய இதனை ஓர் நோய் தீர்க்கும் மருந்தாக அளித்துள்ளார். ஆனால் இதனைப் பயன்படுத்துவோர் தொகை இன்று அருகி வருவது கவலை அளிக்கின்றது. மக்கள் மத்தியில் சில தவறான கருத்துக்கள் பரவியிருப்பதும், இதன் முக்கியத்துவம் போதியளவு வலியுறுத்தப்படாமல் இருப்

பதுமே இதற்குக் காரணங்களாகலாம். ஆனால் திருச்சபையில் பாவ மன்னிப்புப் பெறுவதற்கென ஏற்படுத்தப்பட்ட வழக்கமான முறை பாவசங்கீர்த்தனம்தான் என்பதை மக்கள் மறந்துவிடலாகாது.

இந்த ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் பாவம் செய்தவர் இறைவனோடு ஒப்புரவாவதுடன், இறைமக்களாகிய திருச்சபையுடனும் சமூதாயத்துடனும் ஒப்புரவாகின்றார். இந்த யூபிலியாண்டின் ஆன்மீக புதுப்பித்தலுக்கு இத்திருவருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகின்றது.

## மக்கள் மத்தியில் ஒப்புரவு

இறைவனிடம் மன்னிப்பு வேண்டிநிற்கும் மக்கள் அதேவேளையில் அயலவருடனுள்ள மனவேற்றுமைகளைக் களைவதும் அவசியமாகும். பண்டைய யூதரின் யூபிலி ஆண்டு, மனமாற்றம் பெற்று இறைவனது மன்னிப்பைப் பெறும் காலமாக இருந்ததுடன் சகோதரரின் கடன்களை மன்னித்து, அடிமைகளை விடுதலை செய்து, நிலத்திற்கும் ஓய்வு கொடுக்கும் ஆண்டாகவிருந்தது. ஆகவே தனது பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டுபவர் பிறர் தமக்குச் செய்த குற்றங்களை மன்னிப்பதுடன், தாம் பிறர்மட்டில் கொண்டுள்ள பகைமை உணர்வுகளையும் களைதல் வேண்டும். பரலோக மந்திரத்தில் எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களையும் பொறுத்தருளும்'' என்று வேண்டுவது உள்ளத்தின் ஆழத்திலிருந்து பிறந்து செயலாக பரிணமிக்க வேண்டும். பிறர் என்னை அன்பு செய்து மதிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் மட்டில் நான் கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சியை தன்னும் நான் நியாயப்படுத்த முடியாது. இறைவனை அன்பு செய்வது எமது கடமையாகவிருப்பது போல், பகைவர் உட்பட, அனைவரையும் அன்பு செய்வதும் எமது கடமையாகும்

## சமூகத்தின் பாவங்கள்

தனிப்பட்டோர் பாவங்களுக்காக மட்டுமல்லாமல் சமூகத்தின் பாவங்களுக்கும் மன்னிப்பு பெறவேண்டியுள்ளது. இன்று மக்கள் இறைவனுடைய அரசுக்குப்புறம்பாக, பாபேல் கோபுரம்போல மனித அரசுகளைக் கட்டியெழுப்ப முயல்கின்றனர். முழுச் சமுதாயங்கள் இறைவனை அலட்சியம் செய்து இறைச்சட்டத்திற்கு மாறாக நடந்து கொள்கின்றன. கொடுமைகளும், அநீதிகளும் சமூக, தேசிய அமைப்பிலேயே இடம்பெறுகின்றன. போர்கள் அரசியல் அடக்குமுறைகள், இனப்படுகொலைகள், நிறவெறி மதவெறி, மானிடத்திற்கு எதிரான

குற்றங்கள், வதைமுகாம்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்தல் இவற்றிற்கெல்லாம் யார் பொறுப்பு? இவை தனி மனிதனது செயலல்ல. சமுதாயங்களே நெறிகெட்டு இறைத்திட்டத்திற்கு மாறாக செயற்படுகையில் மனித குலம் வீழ்ச்சியின் பாதையில் விரைந்து செல்ல ஏதுவாகின்றது. இந்த யூபிலி ஆண்டு தனி மனிதர் வாழ்வில் மட்டுமல்லாது சமுதாய வாழ்விலும் ஒரு புதுப்பித்தலை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். சமுதாயத்திலும் மனந்திரும்புதல் ஏற்பட வேண்டும். ''இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' என அன்று ஒலித்த ஆண்டவரின் குரல் இன்றும் எமது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இவை ஓர் எச்சரிக்கை மட்டுமல்ல எம்மையும் எமது சமுதாயத்தையும் குணமாக்கி சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு ஒரு ஆரம்பமாகவும் இருக்குமென நம்புவோமாக.

## உசாத்துணை நூல்கள்


மாபெரும் யூபிலி 2000 - Oscar Battaglia
தமிழாக்கம் - அருட்சகோதரி திரேசா ஊ. ச.

To Be a Pilgrim - Basil Hume O. S. B.
Communtiy in the Lord - Paul Hinnebuach O. P.


---

ஒரு யூபிலியானது எப்போதுமே விசேட அருளுக்குரிய காலமும் ''ஆண்டவரால் ஆசிர்வதிக்கப்பட்ட நாளும்'' ஆகும். ஆகவே யூபிலி மகிழ்ச்சிக்குரிய காலமாகும். 2000 ஆம் ஆண்டு யூபிலியானது புகழ்ச்சியும் நன்றியறிதலுங் கொண்ட ஒரு பெரும் செபமாயிருக்க வேண்டும். முக்கியமாக இறை மகனின் மனிதவதாரமெனும் கொடைக்காகவும், அவர் நிறைவேற்றிய மீட்புக்காகவும் நன்றி கூறும் செபமாயிருக்க வேண்டும்.

(2000 யூபிலி- ஆண்டு பற்றி பரிசுத்த தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் எழுதிய அப்போஸ்தலிக்க மடல் எண் 32)

---

# மறைவாழ்வுக் கல்வியும் விசுவாச வளர்ச்சியும்

அருள் சகோதரி. லூமினா போல்ராஜா
திருக்குடும்ப கன்னியர் மடம்
திருநெல்வேலி.

## மறைவாழ்வு என்றால்:

*மானிட வாழ்வில் "வாழ்வும் விசுவாசமும்" பிரிக்க முடியாதவை. ஒன்றில் இன்னொன்று தங்கியே இருக்கின்றது. சாதாரண வாழ்வின் அனுபவங்களைப் பார்க்கும்போது ஒவ்வொருவருடைய வாழ்வும் நம்பிக்கையாலும், விசுவாசத்தாலும் உறுதியடைவதைக் காண்கின்றோம். விசுவாசம் தளரும்போது — வாழ்வும் தளர்கிறது; விசுவாசம் ஆட்டம் காணும் போது— வாழ்வும் ஆட்டம் காண்கின்றது. இதே போன்றே எமது மீட்பின் வரலாற்றை பார்க்கும் போது, அங்கும் இவ்வுண்மை தெளிவாக இருப்பதை காண முடிகின்றது.*

*இறைவன் படைப்பின் தொடக்கத்தில் தம் சாயலாகவும், பாவனையாகவும் மனிதனைப் படைத்த, நிலை வாழ்வை அருட்கொடையாகக் கொடுத்தார். (தொ. நூல் 1 : 26 ; 2 : 7) ஆனால் மனிதன் இறைவனையும், அவரது வார்த்தையையும், விசுவசியாததால், நம்பாததால் "வாழ்வை" இழந்தான். மாறாத அன்பும், பிரமாணிக்கமும் உள்ள இறைவன் குலமுதுவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் வழியாக இழந்த வாழ்வைப் பெற்றுக் கொடுக்க விழைந்தார். தீமை மீது நாட்டமுள்ள மனித இதயம் (தொ. நூ. 6 : 6) இறைவனுடைய அருளோடு ஒத்துழைக்க மறுத்தது. எனவே இறைவன் தம் ஒரே பேறான மகன் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி இழந்த வாழ்வை நிலையான வாழ்வை மீண்டும் பெற்றுத் தந்தார். நற்செய்தியாளர்களில் ஒருவரான யோவான் தம் நற்செய்தியல் இவ்வுண்மைகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். "விசுவாசமும்-வாழ்வும்" ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றன. என்ற உயர்ந்த மறை உண்மையை வெளிப்படுத்துகின்றார். "தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வைப் பெறும் பொருட்டு ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா. 3 ; 16) "மகனில் விசுவாசம் கொள்பவன் நிலை வாழ்வைக் கொண்டுள்ளான்" (3 ; 36). மேலும்*

உதாரணங்களாக 6; 40, 47 ; 6 : 68; 17 : 2; 20 : 31 ஆகியவற்றை யும் பார்க்கலாம். இதிலிருந்து விசுவாசத்திற்கும், வாழ்விற்கும், ஆழமான நெருங்கிய தொடர்பு உண்டு என்பதும், சாதாரண வாழ்விற்கும், கிறிஸ்தவ வாழ்விற்கும் ''விசுவாசம்'' என்பது ஆணி வேராக இருக்கின்றது என்பதும் தெளிவாகின்றது.

அடுத்து 'மறை' என்ற சொற்பதத்தை எடுத்தால் அதுவும் பல பொருள் கொடுப்பதாக இருக்கின்றது. ''மறை'' என்பது சமயத்தை, ஒரு மதக் கோட்பாட்டைக் குறிக்கின்றது. 'மறை'— அதாவது 'கிறிஸ்தவ மறை' என்பது வெறும் கொள்கை கோட் பாடுகளினால், சட்ட ஒழுங்குகளால், மதநிறுவனங்களால் உருவான ஒரு மறையைக் குறிப்பது அல்ல; மாறாக ''உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்'' (மத். 28 : 20) என்று கூறி வாக்குறுதி அளித்த ''கிறிஸ்து'' என்ற உயிர் வாழும் ஓர் ஆளு டன் உறவு கொண்டு வாழ்கின்ற விசுவாச வாழ்வையே குறிக்கின் றது. புனித பவுல் கூறும் ''கிறிஸ்து இயேசுவை அறிதலாகிய ஒப் பற்ற செல்வத்தின் பொருட்டு எல்லாம் இழப்பு என கருதுகின் றேன்............. குப்பை எனக் கருதுகின்றேன்'' (பிலி. 3 : 8). இன் னும் தாவீது அரசர் கூறும் ''ஆண்டவர் என் உரிமைச் சொத்து'' (தி. பா. 15), ''என் ஆன்மா ஆண்டவரில் மட்டுமே சாந்தி கொள்ளும்'' (தி. பா. 61) என்று கூறும் விவிலியக் கூற்றுக்கள் ''மறை'' என்பதன் உண்மைப் பொருளை எடுத்தியம்புகின்றன. அதாவது கிறிஸ்து என்னை ஆட்கொண்டு, எனது ஆளுமை, மன நிலை, கருத்துக் கண்ணோட்டம், சிந்தனையோட்டங்கள், அணுகு முறைகள், உறவின் தொடர்புகள் அனைத்தும் மறைந்து கிறிஸ்து வின் ஆளுமை, அவரின் மனநிலை, அவரின் கருத்துக் கண்ணோட் டம், அவரின் சிந்தனை ஓட்டம், அவரின் அணுகுமுறை, அவரைப் போல் உறவு, தொடர்புகளை உருவாக்கும் தன்மை என்பன என்னில் உருவாகி ''வாழ்வது நானல்ல; என்னில் கிறிஸ்துவே வாழ் கிறார்'' (கலா. 2 : 20), ''நான் வாழ்வதும் இருப்பதும், இயங்கு வதும் அவராலேதான்'' என்று கூறும் அளவுக்கு கிறிஸ்து + அவ னாக, கிறிஸ்து + அவளாக மாறும் அனுபவம் தான் ''மறை'' தல் ஆகும்.

எனவே ''மறைவாழ்வு'' என்பது திரித்துவ இறைவனுடன் ஆள் தன்மை உறவு கொண்டு விசுவாசத்தில் அன்றாட வாழ்வை அணுகு கின்ற ஓர் இறை அனுபவமாகும்.

## விசுவாசமே வாழ்வின் அடித்தளம்

நாம் வாழும் இன்றைய உலகு எல்லா வகையிலும் ஒரு படி முறையான வளர்ச்சியை நோக்கியே பயணம் செய்கின்றது. மனிதனின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சியிலிருந்து கல்வி, அரசியல் ஆராய்ச்சி, பொருளாதாரம், நாகரீகம் பண்பாடு என்று நாளுக்கு நாள் வளர்ச்சியை நோக்கி முன்னேறுவது நமது கண் கூடான காட்சியாகும். இந்த வளர்ச்சியும், முன்னேற்றமும் ஒரு புறம் ஆக்கத்தையும் மறுபுறம் அழிவையும் கொடுக்கின்ற நிலைப்பாடுகள் உடையனவாக இருப்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

இந்த ஆக்கமும், அழிவின் தன்மைகளும் நிறைந்த உலகில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நமது வாழ்வு விசுவாசத்தில் அடித்தளமிடப்பட்டு நிலைவாழ்வை நோக்கிப் பயணம் செய்யும் வாழ்வாகும். கிறிஸ்துவைத் தலையாகவும், மக்களனைவரையும் உறுப்புகளாகவும் கொண்டு ஒரே மறையுடலாக (1 கொரி. 12 : 12 - 26) அன்பில், விசுவாசத்தில், நம்பிக்கையில் வாழ அழைக்கப்பட்ட வாழ்வாகும். திருமுழுக்கு வழியாகத் தந்தை + பிள்ளை என்ற உறவின் வாழ்வுக்கும், கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்ப்பில் நாளாந்தம் பங்கு கொண்டு வாழ்கின்ற பாஸ்கா வாழ்வுக்கும், ஆவியின் வல்லமையால் வழிநடத்தப்படும் உண்மை வாழ்வுக்கும் அழைக்கப்பட்டுள்ள விசுவாச வாழ்வாகும்.

சிறப்பாக மீட்பின் வரலாற்றைப் பார்க்கும்போது ஒரு சில மக்களின் வாழ்வானது விசுவாசத்தில் அடித்தளமிடப்பட்ட வாழ்வாக இருப்பதைக் காண்கின்றோம். உதாரணமாக "ஆபேல் காயினைவிட மேலான பலியை கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தது விசுவாசத்தினாலேயாகும்'' (எபி. 11 : 4) "ஏனோக் விசுவாச வாழ்வால் இறைவனுக்கு உகந்தவனாய் இருந்தான். எனவே வானகம் எடுத்துக் கொள்ளப்பட்டான்'' (எபி. 11 : 5 – 6) "நோவா எச்சரிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டது விசுவாசத்தினால்'' (11 : 7), "ஆபிரகாம் கீழ்படிந்து தம் சொந்த நாட்டை விட்டுப் புறப்பட்டதும்; ஒரே மகனைப் பலி கொடுக்கத் துணிந்ததும் விசுவாசத்தினால்தான்'' (11 : 8), "மோயீசன் அரச மாளிகையில் இருந்தும் அவ்வின்பத்தை, சுகபோகத்தை அனுபவியாமல் தன் மக்களுடன் சேர்ந்து துன்புற விரும்பியதும் விசுவாசத்தினால்தான்'' (11 : 23). மரியாள் இதோ உமது அடிமை உமது வார்த்தையின்படி ஆகட்டும்'' என்று கூறியதும் (லூக். 1 : 28), கடவுள் தன்மையில் விளங்கிய கிறிஸ்து தம்மையே சிலுவை மரணம் வரை தாழ்த்தி, அடிமையின் தன்மை

பூண்டதும் (பிலி. 2 : 6 - 8) விசுவாசத்தினாலேயேயாகும். அப் போஸ்தலர்கள் தங்கள் உயிரைத் துச்சமென மதித்ததும் "கிறிஸ்து ஆண்டவர்" என்று அறிக்கையிட்டதும் விசுவாசத்தினாலேயே. இவ் விதமாக விசுவாசமானது ஒவ்வொருவரின் வாழ்வுக்கும் அடித்தள மாக, ஊற்றாக, சக்தியாக விளங்கியதைக் காண முடிகின்றது.

திருமுழுக்கின் போது எம்முள்ளத்தில் இலவசக் கொடையாக 'விசுவாசம்' அருளப்பட்டுள்ளது. இக்கொடையானது குழந்தைப் பருவத்தில் பெற்றோர், ஆசிரியர்கள், வழிகாட்டிகளினால் சிறிது சிறிதாக வளர்க்கப்பட்டது. "இறைவன் யார்" என்று முழுமை யாக அறியாமல், விளங்காமல் கைகுவித்து, தலை வணங்கி ஆரா தனை செய்ததே நமது முதல் விசுவாசம். தொடர்ந்து மறை அறிவால், வழிபாடுகளால், திருவருட்சாதனங்களால் "இறைவன் யார்" என்று புத்தி ரீதியாக அறிந்து, தெய்வ பயத்துடன் வாழத் தூண்டியது. வளர்ச்சியும் விசுவாசமும் தொடர்ந்து எமது நாளாந்த நிகழ்வுகள், உறவுகள், அனுபவங்கள் வழியாக அறிவு ரீதியாக அல்ல அனுபவ ரீதியாக இறைவனை அறிந்து, அன்பு செய்து வாழும் நிறைவுள்ள விசுவாசத்துக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. அனு பவ ரீதியாக வரும் விசுவாசம் ஆழமானது உறுதியானது. மாறாக அறிவு ரீதியாக வரும் விசுவாசம் மேலெழுந்தவாரியானது, தளம்பக் கூடியது. எனவே எம் கிறிஸ்தவ வாழ்வு எந்த சூழ்நிலை யிலும் உறுதியுடையதாக இருக்க விசுவாசம் இன்றியமையாதது.

## மறை வாழ்வுக் கல்வி என்றால்:

மறை வாழ்வுக் கல்வி என்பது— மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளோடு ஒன்றாக இணைந்து நடை போடச் செய்யும் ஓர் அனுபவ நிகழ்வாகும். இறை + மனித உறவின் பயணமாகும். ஏனென்றால் மனித வாழ்வு உறவுகளாலான ஒரு பந்தனமாகும் இறைவனோடு அன்புறவு கொள்வதும், அவரின் பொருட்டு பிற ரோடும், படைப்புக்களுடனும் அன்புறவு கொண்டு வாழ்வதுமான ஒரு தொடர் நிகழ்வாகும். இதுவே கிறிஸ்தவ வாழ்விற்கு ஊற்றும் உறைவிடமுமாகும். (லூக். 10 : 27; எபே. 3 : 16 - 19; 1 கொரி 13: 4 — 12). இந்தக் களங்கமற்ற அன்பினால் மட்டுமே மனிதன் மனித னாக வாழமுடியும். நம்பிக்கையோடு வாழ்வை எதிர் நோக்க முடியும். விசுவாசத்தினால் வாழ்வின் நிகழ்வுகளுக்குப் பதிலிறுக்க முடியும். இத்தகைய ஒரு அனுபவம் நிறைந்த வாழ்விற்கு வித்திடு வதே மறை வாழ்வுக் கல்வியாகும்.

மனித வாழ்வு உறவுகளால் ஆனது. இந்த உறவுகளில் எல்லாம் சிறந்தது மனிதன் இறைவனோடு கொள்ளும் உறவு. கண்ணுக்குப் புலப்படாமல் விண்ணில் மட்டும் உறைபவரல்ல நம் கடவுள். மூவொரு இறைவனாய் நம்மோடு ஒருவராய் உறவில் வாழ்பவரே நம் கடவுள். ''வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார்'' (யோவா. 1 : 14) தமது உறவினால் மனித சமுதாயத்திற்கு நிலை வாழ்வு அளிக்கவே வரலாற்றில் ஊடுருவினார். காலங்களைக் கடந்தவர் தம்மைக் காலத்திற்குட்படுத்தினார். மனித மொழியில் பேசினார். மனித அடையாளங்களைப் பயன் படுத்தினார். மனிதனின் இன்ப துன்பங்கள், ஏக்கங்கள், எதிர் பார்ப்புக்கள், தாகங்கள், தவிப்புக்கள் அனைத்திலும் பங்கேற்றார். இவ்வாறு ''கடவுள் நம்மோடு ஒருவரானார்.'' (மத். 1 : 23). இவ் விதமாக மனிதனோடு உறவு கொள்ளும் இறைவனை இனம் காணுவதானது ஓர் விசுவாச அனுபவ நிகழ்வாகும். நேற்றும், இன்றும், என்றும் எம்மோடு வாழும் இறைவனின் நிபந்தனையில்லா, மாற்றமில்லா, முடிவில்லா அன்பை, மன்னிப்பை, பராமரிப்பை, வழி நடத்துதலைக், குணப்படுத்துதலை சுவைக்கச் செய்யும் வாழ்வின் கல்வியே மறை வாழ்வுக் கல்வி. இது ஒரு குறுகிய கால நிகழ்வு அல்ல; மாறாக ஒரு தொடர் நிகழ்வு. குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை ஏன் மரணம் வரை அன்றாடம் நிகழும் ஒரு நெடிய பயண நிகழ்வின் அனுபவமாகும்.

மறைக்கல்வி வாழ்வின் அனுபவங்களோடு இணைக்கப்படாத போது வெறும் மறையைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளும் கல்வியாகவே இருக்கும் என்பது அனுபவ உண்மையாகும். மாறாக இக்கல்வியானது எப்போது அறிவில் தெளிவைத் தந்து, இதய உணர்வுகளைத் தொட்டு, உடல், உளம், ஆன்மா அனைத்தும் சீர் குலைக்கப்படாதவாறு ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு விடுதலை வாழ்வை அனுபவிக்க வைக்கிறதோ; எப்போது எமக்குள்ளும், வெளியிலும் நடக்கும் நிகழ்வுகளை இறை ஒளியில் உய்த்துணர வைக்கின்றதோ; எப்போது இந்நிகழ்வுகளில் எல்லாம் இறைபிரசன்னத்தை, இறை வெளிப்படுத்தலை, விசுவாசக் கண்களால் உற்று நோக்க வைக்கின் றதோ; அப்போதுதான் மறைக்கல்வி, மறை வாழ்வுக் கல்வியாகி ஒருவனை முழு ஆளுமை நிறைந்த, விசுவாசத்தில் தன்னை உருமாற்று கின்ற, இறையரசின் மகனாக, மகளாக வாழுகின்ற வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும், அவனைப் பயிற்றுவிக்கும்.

## இஸ்ராயேலும் - மறை வாழ்வுக் கல்வியும்:

இஸ்ராயேல் மக்களின் வரலாற்றைப் பார்க்கும்போது "யாவே" அனுபவம் அவர்கள் வாழ்வில் மறக்க முடியாத இறையனுபவமாக இருந்தது. இஸ்ராயேல் மக்கள் "இறைவன் யார்" என்பதை தம் வாழ்வின் அனுபவங்களிலேயே இனம் கண்டனர். அவரை விசுவசித்தனர். இறைவன் தம் வாழ்வில் செய்த அரும் பெரும் செயல்களை தலைமுறை தலைமுறையாகப் பகிர்ந்து வந்தனர், சிறப்பாக இவர்களின் 'கடத்தல்' அனுபவம்— அதாவது பாரவோன் அரசனின் கையிலிருந்து, எகிப்தின் கொடிய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தேனும், பாலும் பொழியும் கானான் நாட்டைச் சென்றடைவது வரை இறைவன் ஆற்றிய வல்ல செயல்களை பரம்பரை பரம்பரையாக சொல்லி வந்தனர் (யாத். 13 : 14). இந்த ரீதியில் இஸ்ராயேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட இறைவனைப் பற்றிய அறிவைப் பார்க்கும் போது அது வெறும் அறிவு சார்ந்ததாக இருக்கவில்லை. மாறாக இதய உணர்வுகளால் தொடப்பட்ட, அன்றாடம் இறை பிரசன்னத்தால் உணரப்பட்ட அனுபவக் கல்வியாகவே மறை வாழ்வுக் கல்வி அமைந்திருந்தது.

## அப்போஸ்தலரும் - மறை வாழ்வுக் கல்வியும்

அப்போஸ்தலர்களின் காலத்தில் இடம் பெற்ற மறை வாழ்வுக் கல்வியானது - அப்போஸ்தலர் தம் வாழ்வில் பெற்ற உயிர்த்த இயேசுக் கிறிஸ்துவின் அனுபவத்தினாலும், ஆவியின் அனுபவத்தினாலும் பெற்றுக் கொண்டவற்றை பகிர்ந்து கொண்ட அனுபவக் கல்வியாகும். இந்த அனுபவமே கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளை எடுத்துச் சொல்ல, அதற்குச் சாட்சியம் பகர உந்து சக்தியாக இருந்தது. அப்போஸ்தலர் கிறிஸ்துவோடு வாழ்ந்த காலங்களில் இறை உண்மைகளை அவரின் வாழ்விலிருந்தே கற்றுக் கொண்டனர். அதுமட்டுமல்ல புனித யோவானின் 1ம் கடிதமானது அப்போஸ்தலரின் அனுபவமானது எவ்வாறு அமைந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது. "நாங்கள் கேட்டதை, கண்ணால் பார்த்ததை, தொட்டு உணர்ந்ததை உங்களுக்கு அறிவிக்கின்றோம்" (1 அரு 1:2) என்று கிறிஸ்து என்ற ஆளைப் பற்றிய தம் அனுபவங்களையே மறை வாழ்வுக் கல்வியாகப் பெருந் தெருக்களிலும், செபக் கூட்டங்களிலும், சிறிய குழுமங்களிலும், குடும்பங்களிலும் பகிர்ந்து கொண்டனர், இவர்களின் இறையனுபவம் மிக்க போதனையால் நாளுக்கு நாள் மக்கள் மனங்கள் உடைக்கப்பட்டு புதிய ஒரு வாழ்க்கை முறைக்கு அவர்களை அழைத்துச் சென்றது.

( இதற்கு சான்றாக திரு. தூ. பணி 2: 42-47; 10: 39-42; 26:15 ) என்பவைவற்றைச் சுட்டிக்காட்டலாம். ஆதிக் கிறிஸ்தவசமூகமும், அப்போஸ்தலரும் பெற்ற ஆவியின் அனுபவமே கிறிஸ்து அனுபவத்தை வாழ்வாக்க உந்து சக்தியாக இருந்தது. இந்த ரீதியில் அப்போஸ்தலரைப் பார்க்கும் போது அவர்களின் விசுவாச அனுபவங்களே மறை வாழ்வுக் கல்வியாகப் போதிக்கப்பட்டது.

## நாமும் - மறைவாழ்வுக் கல்வியும்:

நாமும் வாழும் உலகம் ஒரு புறம் ஆக்கத்தில், நாகரீக வளர்ச்சியில், அபிவிருத்தி முன்னேற்றத்தில், உறவுகளைத் தொடர்பு சாதனங்களூடாக வளர்ப்பதில் போட்டி போட்டு முன்னேறி வருகின்றது. ஒட்டு மொத்தமாகச் சொன்னால் உணர்வுகளற்ற ஒரு இயந்திர யுகமாக, கணணியுகமாக மாறிக் கொண்டு போகின்றது. அதேவேளை மறுபுறம் இயற்கை அழிவுகள், செயற்கை அழிவுகள், போர்கள், பட்டினிச் சாவுகள் நோய்கள், மரண ஓலங்கள் ஒழுங்கற்ற, ஒழுக்கமற்ற, பண்பாடற்ற கிற்ற வாழ்க்கை முறைகளின் அவலங்கள் புலம் பெயர்ந்த நிலைகள் என்று வாழ்வுக்கு உத்தரவாதமற்ற ஓர் அழிவின், துயரத்தின் யுகமாக மாறுகின்றது. ஏன் இந்த நிலை?

பழைய ஏற்பாட்டிலே செம்மறியாட்டின் இரத்தத்தால் பெற்றுக் கொடுக்கப்பட்ட விடுதலை வாழ்வும், உரிமை வாழ்வும், மனித மாண்பும் திரும்பத்திரும்ப இழக்கப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாட்டிலே செம்மறியாகிய இயேசுக் கிறிஸ்துவின் விலை மதிக்க முடியாத திரு இரத்தத்தால் என்றுமே பிளவுபடாத, சிதைக்கப்படாத, இறைசாயலும், மாண்பும் கொண்ட விடுதலை வாழ்வை பெற்றோம் ( 1 பேதுரு 1:19-20 ). ஆனால் இம் மாண்பும் விடுதலையும் நிறைந்த வாழ்வை மனிதன் அனுபவிக்க முடியாது வேதனையுறுகின்றான். இதனால் வாழ்வுக்கும், சாவுக்கு இடையே நாளாந்தம் போராடுகின்றான். அன்பு, பரிவு, பாசம், கனிவு, மகிழ்ச்சி, அமைதி, சமாதானம் நிம்மதி எங்கே என்று தேடி அலைகின்றான். இவ்விதமாக இன்றைய மனிதன் உருக்குலைந்த நிலையில் நடமாடுகின்றான். விஞ்ஞானமும், நாகரீகமும் அவனுள் புகுந்ததால் விசுவாசத்தில் தடுமாறுகின்றான்.

திருச்சபை ஆரம்பித்தகாலத்திலிருந்து இன்றுவரை ''புதுப்பித்தல்'' என்பது தொடர்கின்றது. இந்த புதுப்பித்தல்களுக்காக பங்குகள் தோறும், மறைவட்டங்கள் தோறும் பல்வேறுபட்ட ஆணைக் குழுக்கள் பல்வேறு மட்டங்களில் பலதரப்பட்ட பணிகளில் ஈடுபடுகின்றன. இவற்றை விட கருத்தரங்குகள், அருட்சாதனக் கொண்டாட்டங்கள்,

ஆலய வழிபாடுகள், அன்பிய வழிபாடுகள், மறைக் கல்வி வகுப்புக்கள் திருப்பாலத்துவசபை, பங்குக் கூட்டங்கள் என்று புதுப்பித்தலுக்கான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. இருந்தும் உள்ளத்தில் நிறைவில்லை. வாழ்க்கையில் அர்த்தமில்லை என்ற குரலொலிகள் எதிரொலிக்கின்றன.

வாழ்வில் அனுபவமிக்கவர்கள் கூறுவார்கள் ''அனுபவத்தால், பட்டறிவால் பெறும் கல்வி இம்மைக்கும் மறுமைக்கும் உதவும்'' என்று. ஆனால் இன்றைய உலகைப் பார்க்கும் போது அது அறிவில், ஆராய்ச்சியில், உலக முன்னேற்றங்களில் தீவிரமாக வளர்ந்து செல்கின்றதே ஒழிய; நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராக, நாளாந்தம் எம்மோடு வாழ்ந்து, வழிநடத்து வரும் இறைவனின் பிரசன்னத்தை, வழிநடத்துதலை, பராமரிப்பை, சக்தியை இனம்காண தன் கண்களையும், காதுகளையும் இறுக மூடி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அல்லது வாழ்வு பெற வேண்டிய ஊற்றாகிய இறைவனை கைவிட்டு வேறு ஒரு ஊற்றிலிருந்து வாழ்வை அனுபவிக்க விழைகின்றதோ என்றும் சிந்திக்க வைக்கின்றது.

இந்நிலை மாற்றமடைய வேண்டுமென்றால், எமது மறைவாழ்வுக் கல்வி - அன்றாட வாழ்வின் அனுபவங்களின் வெளிப்பாடாக, விசுவாசத்தின் உறுதிப்பாடாக உள்ளங்களை ஊடுருவிச் செல்ல வேண்டும். அன்று திருமுழுக்கு அருளப்பரின் போதனையால் மக்கள் உள்ளங்கள் ஊடுருவப்பட்டது. அதன் விளைவாக ''நாங்கள் செய்ய வேண்டியது என்ன?'' என்று கேட்கத் தூண்டியது ( லூக் 3:10 ). அதே போன்று இராயப்பரின் திருவுரையால் மக்களின் உள்ளங்கள் குத்துண்டது. அதன் விளைவாக ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினர் ( தி. தூ. ப. 2:37 ). இவ்விதமாக எமது மறைவாழ்வுக் கல்வியும் அமையுமானால் எமது எண்ணங்கள், உணர்வுகள், மனநிலைகள், கருத்துக் கண்ணோட்டங்கள் அனைத்தும் உருமாற்றம் அடைந்து புதிய ஒரு வாழ்வுக்கு, இறைவன் விரும்புகின்ற மனமாற்றத்துக்கு ஒவ்வொருவரையும் அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

சிறப்பாக யூபிலி ஆண்டை அண்மித்துக் கொண்டிருக்கும் எமது வாழ்வு வெறும் உலக வாழ்வாக அமையாது. இறையனுபவ வாழ்வாக அமைய இறைவன் திருச்சபை அன்னையூடாக அழைக்கின்றாள். ''எழுந்து தந்தையிடம் செல்வேன்''. என்பதற்கேற்ப திருமுழுக்கின் வழியாக நாம் பெற்ற தந்தை பிள்ளை உறவின் அனுபவத்தை ஆழமாக அழைக்கப்படுகின்றோம். வரலாற்றில் வழிநடந்த மூவொரு

இறைவன் நம்மோடு இன்றும் இருக்கின்றார் உடன் நடக்கின்றார் என்பதை அனுபவமாக்குவோம். எல்லோரும் கிறிஸ்துவில் சகோதரர் என்ற அன்புறவில் பாகுபாடுகள் களைந்து கிறிஸ்துவின் பிரசன்னத்தை அவனில், அவளில் காணுவதை அனுபவமாக்குவோம். வாழ்வில் நாம் சந்திக்கும் துன்பங்கள், எதிர்ப்புக்கள், சவால்கள், நொறுக்கப்படும் நிலைகள், ஒடுக்கப்படும், ஒதுக்கப்படும், வெறுக்கப்படும் நிலைகள், இல்லாமைகள் இயலாமைகள், இழப்புக்கள், உறவு முறிவுகள், போராட்டங்கள் அனைத்தின் ஊடாக கிறிஸ்துவின் பாடு, மரணத்தில் பங்கு கொள்கின்றோம் என்பதை அனுபவமாக்குவோம். மகிழ்ச்சி, அன்பு, அமைதி, சமாதானம், மன்னிப்பு, பரிவு ஆகியவை கொண்ட வாழ்வினால் கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்கின்றோம் என்பதை அனுபவமாக்குவோம்.

இவ்விதமாக எம் வாழ்வின் அனுபவங்கள் ஒவ்வொன்றும் எம் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதுடன் எம்மை:

| | | |
|---|---|---|
| இருளிலிருந்து | — | ஒளிக்கும் |
| சாவிலிருந்து | — | வாழ்வுக்கும் |
| அடிமைத்தனத்திலிருந்து | — | உரிமைப் பேற்றுக்கும் |
| பாவத்திலிருந்து | — | அருளுக்கும் |
| பொய்மையிலிருந்து | — | உண்மைக்கும் |
| ஏமாற்றத்திலிருந்து | — | நம்பிக்கைக்கும் |
| சட்டத்திலிருந்து | — | அன்பு வாழ்வுக்கும் |
| வெறுமையிலிருந்து | — | நிறைவுக்கும் |
| இவ்வுலக வாழ்விலிருந்து | — | நிலை வாழ்வுக்கும் |

அழைத்துச் செல்லும் படிக்கற்களாகவும் இருக்கும்.

ஆரம்பத்தில் விசுவாசமும், வாழ்வும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்று பார்த்தோம். இவ்விதம் ஒன்றோடொன்று இணைந்திருப்பதற்குக் காரணம் எமது வாழ்வில் நாம் அனுபவிக்கும் இறையனுபவங்களாகும். எனவே எமது கடந்த கால மனித+இறையனுபவங்கள்; நிகழ்கால மனித+இறையனுபவங்களில் உறுதிப்படுத்தப்பட்டு, எதிர்காலத்தை விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் எதிர்நோக்கும்

இறை+மனித அனுபவங்களாக மாற மறைவாழ்வுக் கல்வி, தனிமனிதனுக்கும், குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும், நாட்டுக்கும் ஊன்றுகோலாக இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனவே ''யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக'' என்பதற்கொப்ப மறைவாழ்வுக் கல்வி எமக்குக் கற்றுத்தரும் விசுவாச இறையனுபவங்களை ஒருவர் ஒருவருடன் பகிர்ந்து, ஒருவரை ஒருவர் நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் உயிருள்ள கருவிகளாக திகழ்வோம்.

## உசாத்துணை நூல்கள்

★ தோழன் நவம்பர் - டிசம்பர் 1976

★ அவரில் வளர்வோம் நூல்வரிசை

★ இக்காலத்தில் மறைக் கல்வி அளித்தல்

தமிழக விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடு நிலையம் திண்டிவனம். 1980.

---

காலத்தையும் இடத்தையும் தெளிவாக ஆராய்ந்து தக்க இடத்தில் அமர்ந்து, தெய்வத்தை வணங்கி கற்பிக்கும் பொருளை மனதில் தெளிவாக நிறுத்தி விரையாமல் வெகுளாமல் விருப்பமாக முகம் மலர்ந்து மாணவன் நெஞ்சில் பதியும் வண்ணம் நெஞ்சத் தூய்மையோடு ஆசிரியர் கற்றுக் கொடுக்கவேண்டும்.

நன்னூல்

---

# குடும்பம் ஒரு அன்புச் சமூகம்

அருட்சகோ. செ. வசந்தகுமார்
4ம் ஆண்டு இறையியல்

## முன்னுரை

குடும்பம் ஒரு உறவுப்பயணம் என்ற கட்டுரையில் அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி குறிப்பிடுவது போன்று "ஒரு சமூகத்தின் அடித்தள அமைப்பு குடும்பமே. சுரங்களின் சங்கமத்தில்தான் ஒரு புதிய இராகம் பிறக்கின்றது. மலர்களின் சங்கமத்தில்தான் ஒரு புதிய மணம் கமழுகின்றது. உறவுகளின் சங்கமத்தில்தான் ஒரு குடும்பம் உதயமாகின்றது."[1] குடும்பம் ஒரு சிறு திருச்சபை, முன்னறி தெய்வங்களாகிய பெற்றோர், குழந்தைகளுக்கு எப்போதும் இறை பிரசன்னத்திலும், அன்பிலும், பண்பிலும், இறைவாழ்விலும், புனிதத்தன்மையிலும் சிறந்து விளங்க வேண்டும். இவர்கள் தங்கள் தலையாய கடமையாக விளங்கும் நல்வழியில் பிள்ளைகளை நடத்துதலில் எப்போதும் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். இறைவன் குடும்ப வாழ்வை மனித சமுதாயத்தின் தொடக்கமும், அடித்தளமுமாய் அமைத்துள்ளார். கணவனும் மனைவியும் தங்களிடையே உள்ள கடமைகளையும், தங்கள் பிள்ளைகள் பால் உள்ள கடமைகளையும், அன்புடனும் உண்மையான கிறிஸ்தவ உணர்வுடனும் நிறைவேற்ற வேண்டும். குடும்பம் இறைவன் வாசம் செய்யும் நல் இல்லமாக மாற குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் கரம் இணைத்து செயற்பட வேண்டும். சமுதாயத்தில் வாழும் பிறரின் தேவைகளைக் கண்ணுற்று கரங்கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இல்லறமில்லாது நல்லறம் இல்லை என்ற முதுமொழிக்கேற்ப கிறிஸ்தவப் பெற்றோர் எவ்வளவு சிறந்த இறை சிற்பிகள்! இவர்கள் உருவாக்கும் கோயில்கள் அனைத்திலும் இறைவன் வாழ்ந்தால் நவீன உலகில் நாம் காணும் தீவினைகள் எல்லாம் பறந்தோடிவிடும். அப்போது குடும்பங்களில், அமைதி நிலவும், தூய்மை குடிகொள்ளும். இன்னும் சிறப்பாக தொடக்ககால கிறிஸ்தவ சமூகங்களிடையே மிளிர்ந்த நற்பண்புகளான இறைபடிப்பினையை ஏற்றல், நட்புடன் உறவாடல், இறைவிசுவாசத்தில் உறுதியாய் இருத்தல், ஒன்றுபட்டு பகிர்ந்து வாழுதல், ஒரு மனத்தோராய்க் கடவுளைப் புகழுதல் (தி. தூ. ப. 2;42-47

போன்ற கிறிஸ்தவ விழுமியங்கள் தற்கால குடும்பங்களிலே மலர முடியும். அப்போது குடும்பங்கள் அன்பை அள்ளிச் சொரியும் சோலையாக, அன்புச் சமூகமாக, நல் அன்பியமாகத் திகழ முடியும்.

## 1. விவிலியத்தில் குடும்பம்

### அ. பழைய ஏற்பாட்டில் குடும்பம்

ஆதியிலே கடவுள் மனிதனைப் படைத்த போது அவனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். (தொ. நூ. 2:18) ஆண்மகனின் தனிமையைப் போக்கி, இணைந்த வாழ்வு வாழ, குடும்ப வாழ்வு வாழ அவனுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார். அவர்களின் ஒன்றித்த வாழ்வால் உருவானது குடும்பம். குடும்ப வாழ்விலே குழந்தைகளைப் பெற்று குதூகலமாய் வாழ இறைவன் நல்வரமும் கொடுத்தார் அவர்களுக்கு. இவ்வாறு படைப்பின் ஆரம்பத்திலேயே குடும்பத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. தொடர்ந்து இஸ்ராயேல் மக்களின் வாழ்விலே குடும்பம் ஒரு இன்றியமையாத சமூக அமைப்பாகக் காணப்பட்டது. இக்குடும்பமானது வீடு, தந்தையின் வீடு, இனம் போன்ற சொற்களால் அழைக்கப்பட்டு வந்தது. இங்கு மூன்று வகையான அமைப்புக் காணப்பட்டது கருக்குடும்பம், விரிவான குடும்பம், குலமும் கோத்திரமும்.

கருக்குடும்பம் என்பது மிகச்சிறிய அலகாகும். இக்குடும்பத்திலே ஆறுக்குட்பட்ட உறுப்பினர்கள் காணப்பட்டார்கள். இங்கு தந்தையே பெரும்பாலான பொறுப்புக்களைக் கொண்டிருந்தார். மனைவி பிள்ளைகள் மீது சட்டபூர்வமான அதிகாரத்தைக் கொண்டிருந்தார். இந்தப் பொறுப்பு, அதிகாரம் மத்தியிலே குடும்பத்தில் அன்பு குடிகொண்டிருந்தது. புரிந்துணர்வும், மகிழ்ச்சியும் காணப்பட்டது. அன்புச் சமூகமாக அவர்கள் மற்றவர்களோடு உறவு கொண்டிருந்தார்கள். மேலும் முதிர்வயதிலும் பெற்றோரைக் கனம் பண்ணி அன்பு செய்கின்ற பண்பாடு வெகுவாக அவர்கள் மத்தியிற் காணப்பட்டது.

விரிவான குடும்பம் ஒரே மூதாதையரிடமிருந்து தோன்றிய இரண்டு அல்லது மூன்று கருக்குடும்பங்களின் கூட்டமைப்பாகும். இது "தந்தையின் வீடு" என்றழைக்கப்பட்டது. இந்த விரிவான குடும்பத்தவர்கள் அருகருகே அமைந்திருந்த வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். சொத்துக்களையும் விளைபொருட்களையும் தமக்கிடையே பங்கிட்டு சந்தோஷமாக வாழ்க்கை நடாத்தினார்கள். பெரும்பாலும் இவர்கள் ஒரே தொழில் புரிபவர்களாகவே காணப்பட்டார்கள் (காண் 1 நாள் 4:14). இந்த விரிவான குடும்பங்கள் ஒரு கூட்டமைப்பாகச் செயற்பட்டபடி

யால் அதன் ஒற்றுமை காக்கப்பட சில சட்டதிட்டங்களும் வகுக்கப் பட்டிருந்தன. யாரிடமிருந்து இவ்விரிவான குடும்பம் தோன்றியதோ அவரே அக்குடும்பத்தின்மீது அதிகாரம் கொண்டிருந்தார், அதிகாரம் கொண்டிருந்தாலும் அவ்வதிகாரம் அன்புசார் அதிகாரமாகவே காணப் பட்டது. இதனால் அங்கு ஒரு அன்புச் சமூக அமைப்புக் காணப்பட் டது.

குலமும் கோத்திரமும்: பல விரிவான குடும்பங்களின் கூட்டமைப்பே குலமும் கோத்திரமுமாகும். இங்கு அங்கத்தவர்களின் தலை முறைப் பட்டியல் ஒரே குலத்தவர்களைக் கொண்டமைந்திருந்தது. குலம் என்ற ரீதியிலே அங்கு இரத்த உறவு முறை காணப்பட்டது. அதிலும் மேலாக பல ஒற்றுமை அம்சங்கள் காணப்பட்டன. ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளல், அன்பு செய்தல், தேவையில் உதவுதல், உள்ளவற்றைப் பகிரல் போன்ற நற்பண்புகளால் இக் குடும்பம் அணி செய்யப்பட் டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆ. புதிய ஏற்பாட்டில் குடும்பம்

பழைய ஏற்பாடு குடும்பத்தை நோக்கிய விதத்திலிருந்து சற்று வேறுபட்ட நிலையில் புதிய ஏற்பாடு குடும்பத்தை நோக்குகிறது. ஒரு புறம் குடும்பத்திற்குக் காட்டும் பிரமாணிக்கம் நற்செய்திக்குக் காட்டும் பிரமாணிக்கத்திற்குக் கட்டுப்பட்டதே என்று இயேசு கூறு கின்றார் (காண்க மத் 10:34-39, மாற் 3:31-35, லூக் 12:49-53) இன்னும் குடும்பத்திலே பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான அன்பு, மதிப்புப் போன்றவை பற்றியும் இயேசு வலியுறுத்துகின்றார் (மத். 19:16-22; லூக் 18:18-30). ஆரம்ப காலத்தில் திருச்சபை குடும் பத்தைப் பேணுவதை ஒரு நற்செயலாகக் கருதி வந்தது. இதனைத் தூய பவுல் தமது திருமுகங்களிலே அடிக்கடி வலியுறுத்துகின்றார். (திமோ. 5:8). மேலும் குடும்பத்தைப்பற்றிய பாரம்பரியக் கருத்துக்களை மாற்றி கிறிஸ்தவ சமூகத்தை ஒரு புதிய குடும்பமாக நோக்குகிறார். (காண். கலா. 6:10; எபே 2:19). தூய பவுல் தமது பணியிலே முக்கிய மாக கிறிஸ்தவ குழுமங்களை அமைப்பதில் அக்கறை காட்டினார். இக் குழுமங்களுடாக இறைவனைப் பற்றிய நற்செய்தியைப் போதித்தார். பவுல் குடும்பங்களை நற்செய்தியின் ஊடகங்களாகப் பயன்படுத்துகின் றார். அத்தோடு அக்குடும்பங்களை விசுவாச விளைநிலங்களாகவும், அன்பின் அடித்தளமாகவும் மாற்றினார். இதனால் அங்கு ஒரு அன்புச் சமூகம் மலர்ந்தது. அவ்வன்புச் சமூகத்தின் அடிப்படை நோக்கம் ஆண்டவனை அறிந்து அன்பு செய்வதும் அயலவரோடு அவ்வன்பைப் பகிர்வதுமே.

## 2. திருமண முன் தயாரிப்பு.
## Pre - Marital Preparation:

குடும்பம் ஒரு அன்புச் சமுதாயமாக, குட்டித்திருச்சபையாகத் திகழ வேண்டுமாகில் திருமணத்திற்கு முன்னரே கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருக்கவேண்டும். அத்தோடு, முக்கியமாக மகிழ்ச்சியான குடும்ப வாழ்வுக்குத் தேவையான அறிவுரைகளும், திருமணம் பற்றிய திருச்சபையின் கோட்பாடுகள் பற்றியும் போதிய விளக்கம் அளிக்கப்படவேண்டும். கி. பி. 2000 நோக்கி கிறிஸ்தவக் குடும்பங்கள் என்ற கட்டுரையில் அருட்சகோதரி பிளாரன்ஸ் குறிப்பிடுவது போன்று, "திருமணப் பந்தத்திலே நுழைவோர் திருமணம் பற்றிய தெளிந்த அறிவு இல்லாமலே திருமண வாழ்க்கையைத் தொடங்குவதால் எத்தனையோ குடும்பங்கள் இன்று சீரழியும் நிலையில் இருப்பதைக் காண்கிறோம். இளைஞர்கள் ஏட்டளவில் பட்டம் பெற்று வெளியேறிய பின்பும் தாழ்வு மனப்பான்மை, அச்சம், கூச்சம் காரணமாய் பாதிக்கப்படுவதுடன் ஏமாறும் சூழ்நிலைக்கும் ஆளாகின்றனர். குடும்பங்களில் வீண் சந்தேகம், சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. சிலர் தவறியும் விழுகின்றனர்." [2] இதற்குக் காரணம் தேவையான திருமண முன் தயாரிப்பு இல்லாமையே. எனவே ஒழுக்கம் மிகுந்த மக்களாக வாழவும் திருச்சபையின் விருப்பத்தை நிறைவு செய்கின்ற அன்புக் குடும்பங்களாகவும் வாழவும் வேண்டுமாகில் திருமணத்தில் இணையவிருக்கின்ற ஒவ்வொருவரும் திருமணத்தின் முன் ஆயத்தம் செய்வது விரும்பத்தக்கது. திருச்சபை தற்காலத்திலே இதனைப் பெரிதும் வலியுறுத்துகிறது.

## 3. தற்கால குடும்பங்களின் நிலைப்பாடும் அவை எதிர்நோக்கும் பிரச்சனைகளும்.

திருமணமும் குடும்ப வாழ்வும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை, ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. திருமணம் இன்றிக் குடும்பம் இல்லை, அதேபோன்று குடும்பம் இன்றித் திருமணம் இல்லையென்று கூறும் அளவுக்கு இரண்டும் பொருத்தி இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பொருத்தி இணைக்கப்பட்ட குடும்பமானது உறவுகளின் பாலமாகவும், அன்பின் விளைநிலமாகவும், மனித பண்புகளை வளமுறச் செய்கின்ற பள்ளியுமாகத் திகழ வேண்டும். ஒரு குடும்பத்தின் வாழ்வும் பணியும் பரந்துபட்டதாக அமைய வேண்டுமாகில் அக்குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தமக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்யவேண்டும்.

இன்றைய குடும்பங்களில் இது எந்தளவுக்கு உள்ளது என்பது வினாவுக்குரிய விடயமாகவே உள்ளது. சமகாலத்திலே குடும்ப அங்கத்தவர்கள் பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகி அதிலிருந்து மீள முடியாது மன நோயாளிகளாக மாறிவிட்டார்கள். இந்நிலையில் குடும்பத்தின் ஒன்றுபட்ட செயற்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். மேலும், மாற்றுக் கலாச்சாரத்தின் தாக்கத்தால், பெற்றோர்களையும், முதியோர்களையும் பிள்ளைகள் மதிக்கின்ற தன்மை அற்றுப் போய்க்கொண்டிருக்கிறது.

இன்னும் குடும்பங்களிலே கணவன் மனைவிக்கிடையே ஏற்படுகின்ற தகராறுகள்; விசேடமாக புரிந்துணர்வு இன்மை, ஏற்றுக்கொள்ளாமை, அறியாமை, சந்தேகம், குடிவெறி. போன்றவற்றினாலும், ஒழுக்கக்கேடான செயல்களாலும் பிள்ளைகளின் மனமும், வாழ்வும் பாதிக்கப்படுகின்றது. பிள்ளைகளும் பெற்றோரைப் பின்பற்றி அதே செயல்களையே செய்யத் தூண்டப்படுகிறார்கள். அன்பு அற்றுப் போகிறது. வெறுப்புக் குடிகொள்கிறது. இந்நிலையில் குடும்பம் பிளவுபட்டு சின்னாபின்னமாக்கப்படுகிறது. குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. அவர்களின் கிறிஸ்தவ விசுவாச வாழ்வு கவனிப்பாரற்று விடப்படுகிறது. இந்நிலையில் குடும்பங்கள் எவ்வாறு அன்புச் சமூகங்களாகத் திகழ முடியும். அன்புச் சமூகத்திற்குப் பதிலாக ஒரு பிரிவினைச் சமூகத்தை ஏற்படுத்தும் நிலையில் இன்று பல குடும்பங்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்நிலை மாற்றப்பட்டு அன்புச் சமூகமாக குடும்பங்கள் உருவாக்கப்பட ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் கடமைப்பாடு உடையோராக உள்ளனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தம் பொறுப்பை. கடமையை உணர்ந்து செயற்படும் போது பிரிவுபட்டுள்ள குடும்பங்களை ஒன்றிணைத்து அன்புச் சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

## 4. யூபிலி நோக்கிய பயணத்தில் கிறிஸ்தவ குடும்பங்களின் பங்களிப்பு.

*"தனி மனிதனின் நல்வாழ்வும், ஒரு சமுதாயத்தின் நல்வாழ்வும் நல்ல திருமணங்களால் அமைக்கப்படும் சிறந்த குடும்பங்களையே சார்ந்துள்ளது."* (இ. உ. தி. எண்- 47).

குடும்பம் படைப்பின் தொடக்கத்திலேயே இறைவனால் நிறுவப்பட்டது. குடும்பம் சமுதாயத்தின் அடிப்படை அம்சம். குடும்பம் ஒரு சமூகத்தின் தொடக்கமாகவும், அடித்தளமாகவும் உள்ளது. ஒரு சமுதாயத்தை மனித பண்புகள் நிறைந்ததாகக் கட்டி எழுப்புகின்ற பாரிய

பொறுப்பு குடும்பத்தைச் சார்ந்ததேயாகும். முழு மனித குலத்தின் எதிர்காலமே குடும்பத்திற்தான் தங்கியுள்ளது. கிறிஸ்தவ கோட்பாட்டு விழுமியங்களையும், மனித வாழ்வின் விழுமியங்களையும் தோற்றுவிக்கும் ஆரம்பப்பாடசாலை குடும்பம்தான். இதனாற்தான் குடும்பம் ஒரு பல்கலைக் கழகம், குடும்பம் ஒரு கதம்பம் என்று பல அறிஞர்கள் மொழிந்துள்ளார்கள். அத்தோடு இரண்டாம் வத்திக்கான் சங்கமும் குடும்பத்தை ஒரு குட்டித் திருச்சபை, இல்லத் திருச்சபை என்று குறிப்பிடுகின்றது.

கி. பி. 2000 நோக்கி கிறிஸ்தவ குடும்பங்கள் என்ற கட்டுரையில் அருட்சகோதரி பினாரன்ஸ் குறிப்பிடுவது போன்று "ஒரு குடும்பத்தின் நிறை குறைகள் ஒரு சமூகத்தின் நிறை குறைகளாக மாறிக்கொண்டிருக்கும் காலமிது. அத்தோடு பண்பாட்டில் ஏற்படும் மாற்றமும் பல குடும்பங்களை இன்று பெரிதும் பாதிக்கின்றன. இன்றைய பல குடும்பங்களில் கிறிஸ்தவ திருமண நல்லுறவு, பெண்ணின் மாண்பு, பொறுப்புள்ள மக்கட்பேறு, குழந்தைகளின் கல்வி போன்ற நற்பண்புகள் காணப்படுகின்றன."[4] அதேவேளையில் பல குடும்பங்களில் கணவன், மனைவியிடையே பிணக்கு, பெற்றோர் பிள்ளை உறவில் விரிசல், நாளும் பெருகிவரும் திருமண முறிவுகள், சிசுக்கொலைகள் போன்றவையும் இன்றைய குடும்பங்களிடையே காணப்படுகின்றன. பல தடவைகளில் சமூகத்தொடர்பு சாதனங்களின் செல்வாக்கும் இக்குடும்பங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. எனவே திருச்சபையானது திருமணத்தினதும், குடும்பத்தினதும் புனிதத் தன்மையைப் பேணிப் பாதுகாத்து அன்புச் சமுதாயமாக குடும்பங்கள் திகழ்ந்திட வழிசமைக்க வேண்டும்.

## 5. குடும்பம் ஒரு அன்புப் பயணம்.

அன்பு இதயங்கள் இன்ப உதயங்கள் என்ற நூலில் ஆசிரியர் அல்போன்சு கூறுவது போன்று, "ஒரு ஆணும் பெண்ணும் திருமண அன்பால் ஒன்றித்து இணைந்து வாழும் அடிப்படைச் சமூக அமைப்பே குடும்பம். குடும்ப வாழ்வின் முதலும், முடிவும், மையமும் அன்பே. அன்பு நிறைந்து நிலவும் குடும்பம் மகிழ்வின் பிறப்பிடம்; அன்பில்லாத குடும்பம் வறண்ட பாழ்நிலம். குடும்ப வாழ்வு ஓர் அன்புப் பிடிப்பு, இரு இதயங்களின் இணைந்ததுடிப்பு, இரு பார்வைகளின் பாசப் பிணைப்பு, இரு உள்ளங்களின் உடல்களின் அன்புக் கலப்பு எலத் தொடரும் உறவுதான் திருமணம். இவ்வாறு ஈருயிர்கள் அன்பால் ஒன்றாகின்றன. இன்னோர் உயிரை ஈன்று ஆளாக்குகின்றன. இந்த வாழ்வுச் சங்கமத்தில் வளரும் காவியமே இல்லறம்."[5]

இவ்வாறு பல உள்ளங்கள் ஒன்றிணைந்து உருவாக்குகின்ற குடும்பம் என்னும் பூங்கா மலர்ந்து மணம் பரப்பி அன்புச் சமூகமாகப் பரிணமிக்க, அன்புப் பயணமாகத் தொடரப்பட, இறைவனின் உன்னத சசட்சிகளாகத் திகழ ஒவ்வொரு குடும்பமும் சிறப்பான அழைப்பைப் பெற்றுள்ளது. குடும்பத்திலே ஏற்படுகின்ற சில கசப்பான அனுபவங்களையும் கடந்து ஒருவர் ஒருவரை ஏற்று அன்பு செய்ய ஒருமித்த உள்ளத்தோடு குடும்பம் எனும் படகை ஓட்டிச் செல்லும் போது அது அன்புச் சமூகம் என்னும் கரையை எத்தடையுமின்றி இலகுவாகச் சென்றடையும். இடர் வரினும், துயர் வரினும் தொடங்கி விட்ட பயணத்தைத் தொடர்ந்தே ஆக வேண்டும். இல்லாவிடின் பிறரின் பழிச்சொல்லும், இகழ்ச்சியும், ஏளனமுமே கிடைக்கின்ற பரிசாக மாறிவிடும். துணிந்து விட்டோம் தொடங்கிவிட்டோம், அன்புப் பயணத்தை நிட்சயம் இலக்கை எட்டியே தீரவேண்டும் என்ற மன நிலையுடன் குடும்பங்கள் பயணிக்க வேண்டும். இருகரங்கள் இணைகின்ற போதுதான் ஓசை பிறக்கின்றது, அதே போன்றுதான் இதயங்கள் எல்லாம் ஒன்றாய் இணைகின்ற போதுதான் அன்புச் சமூகம் அவனியிலே மலர முடியும்

## முடிவுரை:

இன்றைய குடும்பங்கள் அன்புச் சமூகமாக, குட்டித்திருச்சபையாகத் திகழ வேண்டுமாகில் அவை இறைவார்த்தையிலே அடித்தளம் இடப்பட வேண்டும். இவ்வாறு அடித்தளம் இடப்பட்ட குடும்பங்களிலே பகிர்தல் என்ற பண்பு உருவாகும் போது ஒருவரை ஒருவர் புரிந்து ஏற்றுக்கொண்டு வாழும் போது அன்புச் சமூகம் நிட்சயமாக மலர முடியும், இன்று குடும்பங்கள் அனைத்தும் சுய நலப் போக்குடன் தாம் மட்டும் வாழ்ந்தாற் போதும் ஏனைய குடும்பங்கள் எக்கேடு கெட்டுப்போனாலும் எமக்கென்ன என்ற குறுகிய மனப் போக்குடன் உலகத்தின் நீரோட்டத்தோடு இணைந்து பயணிக்கின்ற படியால் அங்கு அன்புச் சமூகம் மலரமுடியாத நிலை காணப்படுகின்றது. எனவே "நான்" என்ற இந்த குறுகிய மனப் போக்கு களையப்பட குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தம்பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் தனிக்குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக கரம் கோர்த்து சமுதாய நீரோட்டத்துக்குள்ளே குதிக்க வேண்டும். அப்போது 2000 ம் யூபிலி ஆண்டு நோக்கிய பயணத்திலே திருச்சபை விரும்புகின்ற இலக்கை அடைய முடியும். அன்புச் சமூகமாக எல்லாக் குடும்பங்களும் திகழமுடியும்.

## அடிக்குறிப்புகள்:

1. அன்ரனி ஸ்ரனி, ''குடும்பம் ஒரு உறவுப் பயணம்'' மன்னா, புரட்டாதி 1998, பக். 3.

2. தியாகு, ''குடும்பம்'' விவிலியக் களஞ்சியம் II, விவிலிய அறிமுகம், தியான ஆச்சிரமம், சென்னை, 1992, பக். 854.

3. பிளாரன்ஸ் சீ. ஐ. சீ. ''கி. பி. 2000 நோக்கி கிறிஸ்தவ குடும்பங்கள்'', தோழன், மே-ஜுன் 1990, பக். 41-44.

4. பால் லியோன், வ., இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்; இன்றைய உலகில் திருச்சபை தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி திருச்சிராப்பள்ளி, 1967 பக். 848.

5 அல்போன்சு, தே., அன்பு இதயங்கள் இன்ப உதயம், தூய பவுல் கல்லூரி திருச்சிராப்பள்ளி, 1995, பக். 11.

## உசாத்துணை நூல்கள்:

1. அல்போன்ஸ், தே., அன்பு இதயங்கள் இன்ப உதயம், தூய பவுல் கல்லூரி திருச்சிராப்பள்ளி, 1995.

2. அன்ரனி ஸ்ரனி, ''குடும்பம் ஒரு உறவுப்பயணம்,'' மன்னா, புரட்டாதி, 1998.

3. பால் லியோன், வ., இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: இன்றைய உலகில் திருச்சபை, தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 1967.

4. பிளாரன்ஸ், சீ. ஐ. சீ., கி. பி. 2000 நோக்கி கிறிஸ்தவக் குடும்பங்கள்'', தோழன் மே-ஜுன் 1990.

5. புஸ்பராஜன், ஏ., உறவின் சங்கமம், விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடு நிலையம் திண்டிவனம், 1996.

6. தியாகு, ''குடும்பம்,'' விவிலியக் களஞ்சியம் II, விவிலிய அறிமுகம், தியான ஆச்சிரமம், சென்னை, 1992.

# புனித பவுலும் அன்பிய வாழ்வும்

அருட்சகோ: ம. ம. ஞானேந்திரன்
4ஆம் ஆண்டு இறையியல்.

## முன்னுரை :

இன்றைய திருச்சபை, மூன்றாவது சகாப்தத்திற்குள் நுழைய வரலாற்று திருப்பு முனையில் பயணமாகின்றது. இறைமகன் கிறிஸ்து மனித நிலைக்கு வந்த 2000ஆம் ஆண்டை நிறைவு செய்து புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த இந்நிலையில் கிறிஸ்து இவ்வுலகில் ஏற்படுத்திய திருச்சபை அதாவது இயேசுக்கிறிஸ்துவிலான மீட்பின் வாரிசுகளாகிய மனித சமுதாயம், நடந்து வந்த பாதையும், அதன் செயற்பாடுகளும் கிறிஸ்துவின் விழுமியங்களை கொண்டதாக அமைந்ததா என்று ஆராய்வது அதன் வளர்ச்சியின் ஆரோக்கியத்திற்கான ஓர் வழியாகும்.

இன்று பங்கு மட்டத்திலும், மாவட்ட ரீதியிலும், புதுப்பித்தலுக்கான வழியை ஆரம்பித்து, கிறிஸ்தவ நற்செய்தி விழுமியங்களை மக்கள் தமதாக்கிக் கொண்டு தங்களிடையேயும், இறைவனோடும் நல்லுறவை ஏற்படுத்த ''அன்பிய குழும வாழ்வு'' முறைவிடத் தொடங்கியுள்ளதைக் காணலாம் ஆனாலும் நம்மிடையே விளங்கும் கிறிஸ்தவ வாழ்வு, திருச்சபையின் கோட்பாடுகளை மையமாகக் கொண்ட அருட்சாதன ஆன்மீக வாழ்வாக இருப்பதை காணுகின்றோம். வரலாற்றை புரட்டுகின்றபோது திருச்சபையின் ஆரம்பம் தொட்டு கிறிஸதவ வாழ்வு குழுமங்களிலே வாழ்ந்து, வளர்ந்து காலத்திற்குக் காலம் பலரின் வழிகாட்டலின் கீழ் பல வடிவங்களைப்பெற்றுள்ளது.

புனித பவுலுடைய காலத்திலும் அவர் ஏற்படுத்திய குழுமங்கள், இல்லத் திருச்சபைகள், அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்ந்து மற்றவர்களுக்கும் கிறிஸ்துவை அறிவிக்கின்றவையாகவும் அமைந்ததைக் காணலாம் இந்நிலையில் புனித பவுலும், அவர் உருவாக்கிய குழுமங்களும், அதன் விரிவான செயற்பாடுகளும், ஓர் அர்த்தமுள்ள, உயிர்த்துடிப்புள்ள 'குழும வாழ்வை'' உருவாக்க, முன்னுதாரணமாக அமைவதை ஆராய விழைகின்றோம்,

## ஆதிக்கிறிஸ்தவ குழும வாழ்வு

கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும் சரி, பிற்பட்ட ஆதித் திருச்சபையின் காலத்திலும் சரி கிறிஸ்தவம் தனிப்பட்டவர்களின் வாழ்வாக அல்ல, மாறாக ஒரு குழுவாக, குழுமமாக இருந்ததையே பார்க்கின்றோம். ஆதித்திருச்சபையில் நிலவிய வாழ்க்கைமுறை, நற்செய்தி அறிவிப்பு, மனப்பான்மை, மறைப்பணி வாயிலாக திருச்சபை பெற்ற வளர்ச்சி நாம் அப்போஸ்தலர் பணியில் விரிவாகக் காணமுடிகின்றது. தொடக்கத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை விரைவில் நடைபெறும் என எண்ணி எதிர்பார்த்திருந்த காரணத்தினால் ஆதித் திருச்சபையில் நற்செய்தி அறிவுப்பணி மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாக இருந்தது. முனைப்போடு நற்செய்தி எங்கும் எடுத்துச் செல்லப்படவில்லை. மாறாக தங்கள் உடன் சகோதர யூதர்களுக்கு மட்டுமே நற்செய்தியையும், அதன் விழுமியங்களையும் கொடுப்பதில் கண்ணாயிருந்தார்கள். எனவே இக் குழுமத்தில் உயிருள்ள உறுப்பினர் தகுதிக்கு நான்கு படிவ பிரமாணிக்கம் தேவையாக இருந்தது. அப்போஸ்தலர்களின் வார்த்தையை ஏற்றுக் கொள்வதிலும், சகோதர ஒன்றிப்பு, அப்பத்தைப் பிட்டு பங்கு கொள்ளுதல் மற்றும் பொது மன்றாட்டு ஆகியன. அதாவது அன்பிலே ஒன்றித்து வளரவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்கள். இவ்வாறு அப் பணி. 2 : 42 - 46 வாக்கியங்கள் கூறும்போது: அவர்கள் அப்போஸ்தலர்களின் படிப்பினைகளைக் கேட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்டு இடுதலிலும், செபிப்பதிலும் நிலைத்திருந்தார்கள். விசுவாசிகள் ஒருமித்து உடமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய்க் கொண்டிருந்தார்கள். நில புலன்களையும், உடமைகளையும் விற்று அவரவர் தேவைக்கு ஏற்றவாறு எல்லோரும் பங்கிட்டுக்கொண்டார்கள். இந் நிலையில் ஆதிக் கிறிஸ்தவ சமூகம், சமூக வாழ்வின் சிக்கல்களை மனம் திறந்து அப்போஸ்தலரிடம் வெளியிட்டு, தெளிவு கண்டு, துடிப்போடும் தூய்மையோடும் சகோதர நட்புணர்வோடும் இறைவார்த்தையில் வேரூன்றி வளமாய் வளரத் தொடங்கியது. இவ்வாறு பல குழும அமைப்புகளுக்குள்ளே வாழப்பட்ட கிறிஸ்தவ வாழ்வில், நட்புறவு, அன்பு பொதுவுடமை என்ற இருமுக்கிய பண்புகள் மேலோங்கி நின்று, அன்பில் வாழப்பட்ட ஒரு சமூகமாக இருந்ததைக் காணலாம். இங்கு சிறப்பானதொரு விடயம் யாதெனில் எவரும் கட்டாயப்படுத்தப்படவில்லை எனினும் "சுய நலம் கொண்டவர்கள் தீமைக்கு அடிமையானவர்களாகவே காட்டப்படுகின்றனர். (அப். பணி 5 : 1 - 11) இவ்வாறு ஆதிக் கிறிஸ்தவ வாழ்வு ஆவியின் உந்துதலாலும், உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னமானது உணரப்பட்டு' இதன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தினாலும்,

பல குழுமங்களிலே வாழப்பட்டு, வரலாற்றினூடாக வளர்ச்சியடைந்ததை அறிய முடிகின்றது. எனவே குழும வாழ்வு கிறிஸ்தவ வாழ்வின் சாரம் என கூறலாம்.

## பவுல் அமைத்த குழும வாழ்வும் அதன் வளர்ச்சியும்:

ஜெருசலேம் திருச்சபை தாய் திருச்சபையாக தொடர்ந்து இருந்தது. காலப்போக்கில் ஜெருசலேமில் திருச்சபைக்கு எதிராகப் பெருங் கலாபனை எழுந்தது. கிறிஸ்தவர்கள் யூதேயா, சமாரியா நாட்டுப்புற மெங்கும் சிதறுண்டு சென்றார்கள். சென்ற இடமெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றினார்கள். பலர் கிறிஸ்தவ வாழ்வைத் தழுவிக்கொண்டார்கள். இதில் குறிப்பிடத்தக்கவர்கள் கிரேக்கர்கள். இச் சூழ்நிலையில், கிறிஸ்து யேசுவால் நிறுவப்பட்டு பரப்பப்படுகின்ற திருச்சபையை அழிக்க வீர உணர்வோடும், கொன்றுபோடுவோம், சிறைப்படுத்துவோம், அடியோடு அழித்தொழிப்போம் என்ற பல சிந்தனைகளோடு (கலா. 1: 13; அப். பணி 7: 55–8: 11) சென்ற சவுல், தமஸ்குப் பாதையில் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப் பட்டு பவுலானார் (அப். பணி. 9: 11–19). கிறிஸ்துவிலான மீட்பினுடைய சமுதாயக் கூறுகள் அனைத்தும் திருச்சபையின் ஆர்வத்திற்குமுரியவை. ஆயினும் பவுல் தமஸ்குக் காட்சியில் கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்கும் இடையிலான மறைபொருளை, ஒப்புவமையின் வெளிப்பாட்டினை அங்கே கண்டார். அனுபவத்தினால் எழுந்த சிந்தனையானது இந்த முதல் உள்ளுணர்வை மேலும் வளரச் செய்கிறது. திருச்சபையை கட்டியெழுப்புகின்ற போது, அதனுடைய எல்லாப் பரிமாணங்களையும் கண்டுபிடித்து முழுமூச்சுடன் உழைப்பவரானார்.

இவ்வாறு பல பரிணாமங்களினூடாக கிறிஸ்துவையும் அவர் இவ்வுலகில் நிறுவிய திருச்சபையையும் நானிலமெங்கும் அறிவித்து கிறிஸ்தவ வாழ்வு வாழ ஊக்குவித்தார். இதற்காகப் பவுல் மேற்கொண்ட செயற்பாடுகளில் "குழும வாழ்வு" அமைப்பு முறை திருச்சபையில் உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்தியதொன்றாக அமைந்தது எனலாம். இங்கு எவரும் அங்கத்தினராக இருக்கலாம். புறவினத்தாருடைய அப்போஸ்தலனின் நோக்கில் அவர் காண்கின்ற பொத்த் இறைத்திட்டமானது (கலா. 2: 8–9; உரோ. 15: 20) எல்லா மகிமையோடும் மிளிர்கின்றது (எபே. 1) திருச்சபை அதன் அகலத்திலும் உலகளாவிய நிலையிலும் கிறிஸ்துவின் உடல், இவ்வாறு யூதரையும், புறவினத்தாரையும் இணைப்பவராக காட்டப்படுகின்றார்.

இந்த அடிப்படையில் பல குழுமங்களை ஏற்படுத்தினார். எத்தனை அங்கத்தவர்களை குழுமம் கொண்டுள்ளது என்பது முக்கியமல்ல மாறாக அது குறைந்த அங்கத்தவரைக் கொண்டாலும் அதன் வாழ்க்கை முறை கிறிஸ்தவ வாழ்வைக் கொண்டுள்ளதா என்பது தான் முக்கியம். இன்னும் ஒவ்வொரு குழுமத்தில் உள்ளவர்களும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம் என்ற ஒன்றிப்புக்கான உணர்வைக் கட்டியெழுப்புகின்றார். அதிலும் மேலாக ஒரு குழுமத்தில் தேவை ஏற்படுகின்ற போது மற்றைய சகோதர குழுமங்கள் அதன் தேவையை நிறைவேற்ற முன்வரவேண்டுமென நினைவுபடுத்துகின்றார் (1 கொரி. 16! 1–4; 2 கொரி. 8–9; 2ரோ. 15: 26–27). இவ்வாறு மற்றவர் தேவையை குழுமங்களுக்குள்ளே உணர்ந்துகொள்ள பல செயல்திட்டங்களை ஏற்பாடு செய்தார். எனவே திருச்சபையில் பல குழுமங்களை உருவாக்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், அதன் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டு உழைத்தார். அதாவது குழுமங்களுக்குள்ளேயும், வெளியேயும் இருந்து பிரச்சனைகள் எழும்புகின்றபோது நேரடியாக அந்த குழுமங்களை சந்தித்தோ அல்லது கடிதங்கள் வழியாகவோ கிறிஸ்தவ விசுவாசத்தில் வாழ ஊக்கப்படுத்தினர். இவ்வாறு பவுல் அமைத்த குழும வாழ்வு முறை உயிருள்ளதாகவும் திருச்சபையில் நம்பிக்கையை கொடுப்பதாகவும் அமைந்தது எனலாம்.

## குழும வாழ்வில் பவுல் எதிர்கொண்ட சவால்கள்:

தொடக்கத்தில் இருந்து திருச்சபையில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட இரண்டு குழுக்கள் காணப்பட்டன. ஒன்று பலஸ்தீனிய யூதக் கிறிஸ்தவர்கள் மற்றையது புறவினத்தார்கள். இந்த இரண்டும் திருச்சபையில் பிளவை ஏற்படுத்தும் குழுக்களாக அமைந்தன. ஏனெனில் யூதக் கிறிஸ்தவர்கள் சிந்தனையின் படி யூதர்கள் மட்டுமே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், இறைவன் அவர்களுக்கு மட்டுமே உரிமையானவர், எனவே புறவினத்தவர் திருச்சபையில் சேருமுன் விருத்தசேதனம் செய்யவேண்டும், மற்றும் மோயீசனின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என எதிர்பார்த்தனர், அதாவது புறவினத்தான் ஒருவன் கிறிஸ்தவனாக மாறும் முன் ஒரு யூதனாக மாற வேண்டும் என்று யூத சட்டத்தில் நம்பிக்கைவைத்து நெறிபிறழாது வாழ்ந்த யூதர்கள் புறவினத்தாரை கட்டாயப்படுத்தினார்கள். இதுவே திருச்சபையின் குழப்ப நிலைக்கு காரணமாக அமைந்ததைக் காணலாம் இந்த நிலை இவ்வாறுஇருக்கப் பவுல் தனது முதல் நற்செய்திப் பயணத்தின் இறுதியில் அந்தியோக்கியாவில் சிறிதுகாலம் தங்கி, புறவினத்

தார்க்கு நற்செய்தியை அறிவித்து திடப்படுத்தினார். ஆனால் இங்கும் யூதேயாவிலிருந்து வந்த சிலர் மோயீசனின் விருத்தசேதனம் பற்றிக் கற்பித்துக் குழப்பத்தை ஏற்படுத்தினர். இதனால் பவுல் அவர்களுடன் பெரும் வாக்குவாதங்களை எதிர்கொண்டார் (அப். பணி 15: 1–2). இன்னும் பல பிரச்சனைகளைப் பவுல் குழும அமைப்பிலே எதிர்நோக்கினார். ஏனெனில் பவுலின் இந்த அமைப்பு முறையானது திறந்த மனதுடையதாகவும், யாரையும் ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பான்மையுடையதாகவும் காணப்பட்டது. எனவே "யூதரிடமிருந்து பவுல் சந்திக்கின்ற எதிர்ப்புக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தறிக்கப்பட்ட அடிமரத்துடன் புறவினக் காட்டு இனத்தை ஒட்டவைக்க வழி வகுக்கின்றன." என விவிலிய களஞ்சியத்தில் பதிப்பாசிரியர் தியாகு திருச்சபை என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடுகின்றார். இன்னும் பவுல் ஓர் யூதன் கமாலியேலின் கீழ் யூதசட்டத்தை நுணுக்கமாக கற்றவன் என்ற நோக்கில் (அப். பணி 22: 3–5) தனக்குள்ளேயும் அதாவது யூத சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டியவர் அதற்கு எதிராகவும் அவ்வாறு யூதர்களை எதிர்த்து குழுமங்களில் பதிக்கப்பட்ட புதிய உணர்வைப் பாதுகாக்க வேண்டி, முரண்படுத்தப்படாத முறையில் போராட வேண்டியவராக காணப்பட்டார். இதன் நிமித்தம் யூதமறைக்கும், கிறிஸ்தவத்திற்குமுள்ள வரையறுக்கப்படாத வேற்றுமைகளை பறைசாற்ற வேண்டி இருந்தது. இது நாளடைவில் பதட்ட நிலைமையைத் திருச்சபைக்குள் ஏற்படுத்தியது, இந்நிலை ஜெருசலேம் சங்கத்தில் முடிவு காணும் வரையும் நிலவியிருந்ததைக் காணலாம்.

இதைவிடக் குழுமங்களிடையே பலவிதமான பழக்க, வழக்கங்களுக்கு எதிராக போராடவேண்டியிருந்தது. சிலை வழிபாடு, கெட்ட நடத்தைகள், வறியோரைப் புறக்கணித்தல், பிளவுகள் (1 கொரி 10: 7–14; 1 கொரி 11: 17–34) முரண்பாடுள்ள கருத்துக்கள் (கலா. 3: 10–14) நிறுவிய குழுமங்களை எதிரிகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டியிருந்தது (பிலிப். 3: 1–4: 9) இவ்வாறு பவுல் பலவிதமான சவால்களை எதிர்கொண்டார்.

## இன்றைய "அன்பிய குழுமவாழ்வு"

குழுமவாழ்வானது திருச்சபையின் சாராம்சத்திற்கு உரித்தான தொன்று. ஆனால் காலப்போக்கில் மறைந்து அது நிறுவனத்தன்மை பெற்று உலகிலே பாரிய அமைப்பாக விளங்குகின்றது. இவ்வாறு கடந்த பல நூற்றாண்டுகளாக மறக்கப்பட்ட குழும வாழ்வின் தன்மைகள்தான், திருச்சபையின் அடிப்படையான தன்மையென்பதை

மீளக்கண்டுகொண்டு, திருச்சபை ஓர் குழுமம், இத்தகைய ஒரு வாழ் விற்கு அழைக்கப்பட்டுள்ளது என்றுணர்ந்து, புதிய சிந்தனைப் போக்கினை வத்திக்கான் சங்கம் நிலைநாட்டியது.

வத்திக்கான் சங்கம் மீளக்கண்டுகொண்ட திருச்சபையின் வடிவத்தையும், தன்மையையும் உள்வாங்கிக்கொண்டு ஆசியாவில் திருச்சபையின் வாழ்வு குழும வாழ்வாக இருக்கவேண்டுமென்று ஆசிய ஆயர் மன்றங்களின் கூட்டமைப்பு ( FABC ) தெளிவாக வலியுறுத்தியது. 1995 இல் நடைபெற்ற தேசிய மேய்ப்புப்பணி மகாநாட்டில் வத்திக்கான் சங்கமும், ஆசிய ஆயர் மன்றக் கட்டமைப்பும், மீளக் கண்டுகொண்ட குழும வாழ்வின் தன்மையை வலியுறுத்தி இலங்கைத் திருச்சபையும் அவ்வாறு விளங்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதில் "பங்குகளிலுள்ள ஆன்மீக சிறு குழுக்களை சமூகங்களின் சமூகமாகக் கொள்ளமுடியும். மனங்களிடையே ஒற்றுமை மலர்ந்திட பங்குகளிலுள்ள அடிப்படை கிறிஸ்தவ குழுமங்கள் மிகச் சிறந்த கருவிகளாகலாம்" எனக்காட்டப்படுகின்றது. இதற்கு முன் 1994 இல் நடாத்தப்பட்ட யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் திருச்சபை ஓர் குழுமம் என்ற சிந்தனை ஆழமாக வலியுறுத்தப்பட்டது " குழுமவாழ்வு திருச்சபையின் சாராம்சத்திற்கு உரித்தானது. அது வாழ்வுக்கு இன்றியமையாதது எனவே நமது மக்களின் வாழ்வு, முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்[2]" எனக் கூறுகின்றது. இன்னும் வத்திக்கான் சங்கம், ஆசிய ஆயர் கூட்டமைப்பு விடுக்கும் அறைகூவலை ஏற்றுக்கொண்டு குழுமவாழ்வை கட்டியெழுப்ப முனைகின்றது.

எனவே இந்த குழுமவாழ்வை எம்மிடையே கட்டியெழுப்ப வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டுமென்ற அடிப்படையான கேள்வியும் எழாமலில்லை. இதன் வெளிப்பாடாக யாழ். மறைமாவட்டத்திலே கடந்த மூன்று ஆண்டுகளாக தொடக்ககால திருச்சபையை மாதிரியாகக் கொண்டு ஒரே மனமும், ஒரே உள்ளமும் கொண்டவர்களாய், உயிர்த்த கிறிஸ்துவின் ஒருவனைப் பிரசன்னமாய் இருக்கும் நற்செய்தி வார்த்தையையும் எம்மையும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் எமது பங்குகள் அனைத்தும் செயற்பட்டன. இதன் பாதையிலே பங்குகளிலுள்ள பத்து பதினைந்து அயற் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து "அன்பியங்கள்" எனப்படும் சிறிய கிறிஸ்தவ குழுமங்களாக உருவாகி இயங்கி வருகின்றன. புதிய வகை

யில் திருச்சபையாக இருக்கும் இந்த அனுபவம் பலரை ஆன்மீகத்திலும், ஒருவரொருவர் மேற்கொண்ட உறவுகளிலும் ஈடுபாடுகளிலும் ஆழப்படுத்தியுள்ளன. வார்த்தை வாசிக்கப்பட்டு, அதன் ஒளியில் வாழ்வின் சிக்கல்கள் பகிரப்பட்டு, தெளிவு கண்டு வாழ முயற்சிக்கின்றார்கள். பொதுப்பணிகளில் ஈடுபட்டு உழைக்கின்றார்கள். இன்னும் மக்கள் இடம்பெயர்வின்போது பல ஆலயங்களிலிருந்து உணவுப் பொதிகள் பகிரப்பட்டன. மக்கள் களைத்து வருகின்றபோது தாகம் தீர்க்கப்பட்டது. ஒரு வளவினுள் பத்துப் பதினைந்து குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்தன. இவற்றைவிட மீண்டும் யாழ். வந்தபோது வன்னி மண்ணில் பட்டினியால் வேதனையுறும் சகோதரர்களுக்காக நிதிதிரட்டப் பல ஒறுத்தல்களையும் செய்தார்கள். இவ்வாறு இன்று யாழ். திருச்சபையானது "அன்பு சமூகத்தை" நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளது.

## பவுலின் குழுமவாழ்வு அமைப்பு முறை இன்று எவ்வளவிற்கு சாத்தியமானது.

இக்கூற்றை ஆராயுமிடத்து, பவுல் பல குழுமங்களை உருவாக்கினார். எல்லாக் குழுமங்களும் தனிச் சிறப்புக்களைக் கொண்டதாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக திருச்சபையானது தனது வாழ்வு, இணைப்புத்திறன் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் ஊற்று என்றளவில் கிறிஸ்துவுடன் ஒன்றுபட்டுள்ளது. இவ்வாறு கிறிஸ்துவில் தங்கியுள்ள இம்முழுமையின் மணிமகுடமாக திருச்சபை விளங்குகின்றது. எனினும் பல பணிகளின் பொருட்டு பல பங்குகளாகவும், இன்னும் குழுமங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிர்த்துடிப்புள்ள திருச்சபையாக வாழ, கிறிஸ்தவ குழுமங்களின் அவசியத்தையுணர பல கருத்தரங்குகள், மறையுரைகள் முன்னெடுக்கப்பட்டும் அனைத்தும் வெறும் வார்த்தைகளாக மக்கள் மத்தியில் ஊன்றாத, உணராத விடயமாக இருப்பதைக் காணலாம். இதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இன்று நாம் வாழும் திருச்சபையில் நிறுவனமாக்கப்பட்ட சமய வழிபாடுகள் மக்களின் ஆன்மீக இயக்கங்களை வெளிப்படுத்த போதுமான வடிவங்களாயில்லை. பங்குகள் இறுக்கமான அமைப்புக்களுடனும் பங்கு ரீதியான கட்டமைப்புக்களுடனும் செயற்படுகின்றன. இங்கே இறைமக்கள் முழுமையான பங்களிப்பின்றி செபத்தில் திருப்திகாணாது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திக்க சக்தியைப்

பெறமுடியாது. வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தாது வாழும் நிலை. கோயில்களில் வழக்கமாக நிகழும் வழிபாடுகளில் குழு உணர்விற்கும், உறவுக்கும் போதிய வாய்ப்புக்கள் கொடுக்கப்படவில்லை. திருத்தலங்கள் நவநாட்கள், பக்தி முயற்சிகள் வழியாக உடல் உலக நலன்கள் பெறுவதுதான் இலக்கே தவிர இறை அனுபவத்தை பெற முடியாத நிலை. இவ்வாறு பங்குகளுக்குள்ளே சாதிமனப்பான்மையும், போட்டியும் பொறாமையும் நிலவி மக்களிடையே புரித்துணர்வின்மையையும் பிரிவினைகளையும் தோற்றுவிக்கின்றனவாக அமைந்துள்ளது. இந்நிலை திருச்சபையில் ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் பெரும் குந்தகமாக அமைவதைக் காணலாம்.

இதைவிட இன்றைய யதார்த்த சூழல் பலவிதமான பிரச்சனைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறது. யுத்தம் நாளுக்குநாள் பலவிதமான தாக்கங்களை மனிதரிடையே ஏற்படுத்தி பல வடுக்களைப் பதித்துச் செல்கின்றன. இவ்வாறு நாளுக்குநாள் திக்குமுக்காடி, திகைத்து, நம்பிக்கை இழந்து வாழ்கின்றனர். இது ஒருபுறம்; மறுபுறம் நுகர்வுக் கலாச்சாரத்தின் கவர்ச்சியும், தவறான மதிப்பீடுகளும் தொடர்புச் சாதனங்களின் கலபமான ஈர்ப்பும் பிரச்சனைகளை நிதானமாக எதிர் கொள்ள உதவாது திசைதிருப்பிக் கொண்டிருக்கின்றன. ஒழுக்கக் கேடான பல உறவுமுறைகள் தலைவிரித்தாட தொடங்கியுள்ளன. வறுமை, உறவுகளின் இழப்புக்களினால் ஆதரவின்மை, அகதிவாழ்வு, அனாதைவாழ்வென்று பிரச்சினைகள் வளர்ந்துகொண்டு போகின்றன. இச்சங்கடமான நிலையில், பாதிப்புக்குள்ளான சாதாரண மக்கள் உள்ளார்ந்த உந்துதல்களால் அமைதியைத் தேடுகின்றனர். இதன் வெளிப்பாடாக திருச்சபையை விட்டு விலகியுள்ள அமைப்புக்களுக்குள் புக முற்படுகின்றனர். இத்தகைய பரவலான பங்கேற்பும், ஆன்மீகத் தேடலும் திருச்சபைக்கு சவாலாகவும், உணர்வுள்ள திருச்சபையாக மாற உந்துசக்தியாகவும் அமைகின்றது.

## முடிவுரை:

வத்திக்கான் சங்கப் புதுப்பார்வையில், திருச்சபை தன்னைப் புதுப்பித்து கொள்ள பல முனைப்பான செயற்பாடுகளை முன்னெடுத்தது. இந்த முன்னெடுப்புக்களின் முயற்சியாக கிறீஸ்தவ வாழ்வின் சாரமாகிய அன்பிய குழுமவாழ்வை உருவாக்க முனைகின்றது. இந்தக் குழுமங்கள் கிறீஸ்தவ உருவாக்கம், நற்செய்தி அறிவிப்பு எனும் இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றுவதோடு அன்பெனும் கலாச்சாரத்தில் புதியதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பத்

திண்ணமாக அமைகின்றன. எனினும் நிறைவான அன்பு சமூகத்தை நோக்கிச் செல்லும் பயணம் கடினமானது. சிலர் இதைப் புரிந்து கொள்ளமாட்டார்கள், இன்னும் சிலர் ஏற்றுக்கொண்டாலும் தம் பழக்கத்தை மாற்றிக்கொள்ள, மனமாற்றம் பெற பின்வாங்குவார்கள். ஏனெனில் யேசுக்கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள அனைத்தையும் இழப்பதும், அவர் பொருட்டு மடமையாவதற்கு ஆயத்தமாவதும் கடினமான காரியங்களாகும். (காண். பிலிப். 3; 8, 1 கொரி. 4; 10)

கடவுள், அன்பால் இணைக்கப்படும் மூவொரு இறைவனாக இருப்பதுபோன்று, கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர் களும் தம்மிடையே ஒரு குடும்பமாக, தோழமை நிறை குழுமமாக இருக்க வேண்டுமென்றே செயற்பட்டார். (காண் யோவான் 17: 18—23) இறைமகன் கிறிஸ்துவின் இலட்சியக் கனவும் இதுவேயாகும். எனவேதான் கிறிஸ்துவைச் சூழ இருந்தவர்கள் இந்தப் புதிய வாழ்வை தமதாக்கிக் கொண்டார்கள். (லூக். 8: 1—3) தொடக்ககாலக் கிறிஸ் தவர்கள் நெருங்கிய உறவு கொண்டவர்களாய் வீடுகளில் ஒன்று கூடித் திருச்சபையாய் விளங்க பவுல் வழிகாட்டினார். இந்நிலைக்கு கிறிஸ்துவை எதிர்கொண்ட அனுபவமும், திடகாத்திரமான தலை மைத்துவப் பண்பும், அவர் ஏற்படுத்திய குழுமங்களில் இருந்த புதிய உணர்வும், அதன் செயற்பாடுகளும் காலத்தின் தடைச் சுவர்களைத் தகத்தெறிந்து இறைவாழ்வில் முழுமையாகப் பங்கேற்கும் வழியைத் திறந்து வைத்தது.

இந்த இலட்சியத்தை நாம் இன்று அடைந்து கொள்ள வழி சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை உருவாக்கி கிறிஸ்தவ வாழ்வின் மதிப் பீடுகளை விதைத்து வளர்ப்பதாகும். இவ்வாறு உருவாக்கப்பட்ட இந்தச் சிறிய குழுமங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு பங்கை உருவாக்க அந்தப் பங்கு சிறிய குழுமங்களின் தோழமையில் குழுமமாக, அன்புச் சமுதாயமாகத் திகழ முடியும்—ஏனெனில் திருச்சபையின் பங்கேற்புத் தன்மை பற்றியும், அதனது சாட்சியவாழ்வு பற்றியும் உணர்வூட்டம் பெற்ற இறைமக்கள், இச்சிறிய குழுமங்களாக செயற்படும்போது திருச்சபையில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த விழிப்புணர் வுடன் பங்கேற்புத் தன்மையை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் பல் வேறு தேவைகளை முன்னெடுத்து பல குழுமங்கள் உருவாக்கப்படும். இவ்வாறு உருவாக்கப்பட்ட குழுமங்கள் வெறும் செயற்பாட்டுக் குழுக்களாக மட்டும் அமையாது, திருச்சபையை ஓர் அருள் அடை யாளமாகவும், இறை பிரசன்னத்தின் கருவியாகவும் மாறுகின்றன. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் தவக்கால திருமடல்

1999 கூறுவது போல், "தந்தையோடு கொண்டுள்ள அன்பின் அனுபவம் கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்காகத் தம்மை அர்ப்பணித்து, தம் சகோதர சகோதரிகளுக்கு பணிபுரியவும், நிறைந்த மனத்தோடு கூடிய ஒற்றுமை வாழ்வு வாழவும் தூண்டுகின்றது. அன்னையாம் திருச்சபை வரலாற்றில் பல சவால்களுக்கு மத்தியிலும் மிகப் பரந்த அளவில் இறையன்புக்குத் தனது வாழ்வாலும் வார்த்தையாலும், செயற்பாட்டினாலும். சாட்சியம் பகர்ந்துள்ளது. இன்றும் கூட நமது செயற்பாடுகள் அனைத்தும் இறையன்புப் பணிக்குச் சாட்சியம் பகரவேண்டிய நிலைக்கு நம்மை அழைத்துவர வேண்டும். புதிய வடிவமெடுத்துள்ள ஏழ்மைக்கும், பல உள்ளங்களைத் தாக்கும் பிரச்சனைகளுக்கு நாம் உறுதியானதும் பொருத்தமான முடிவைக் கொடுக்கவேண்டும்—தனிமையில் வாடுவோர், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டோர், நம்பிக்கையிழந்தோர் அனைவரும் திருச்சபையின் அன்புப் பராமரிப்பையும், உலகின் தொடக்கம் முதல் ஒவ்வொரு மனிதனையும் தனது நிறை ஆசீரால் நிரப்பும் வானகத் தந்தையின் இரக்கம் நிறைந்த அன்பையும் அனுபவிக்க வேண்டும்". எனவே பொதுநிலையினர், துறவியர், குருக்கள் ஆகிய நாம் ஒவ்வொருவரும் விதிவிலக்கின்றி இந்தப் பாரிய முயற்சியில் கைகோர்த்து எம்மைச் சோர்வின்றி ஈடுபடுத்தி பங்கேற்கும் திருச்சபையாக மாறுவோம்.

அடிக்குறிப்பு

1. விசுவாசத்தின் புதிய விடியல், தேசிய மேய்ப்புப் பணி மாநாடு 1995 pg 105.
2. புதுப்புனல், யாழ் மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு 1994 P. 54.

உசாத்துணை நூல்கள்:


1. BAGATTI, Bellarmino, The Church from the Circumcision: History and Archaeology of the Judaeo-Christians, Franciscan Printing Press Jerusalem 1971.
2. HAWTHRONE, Gerald F., and Ralph P. Martin eds. Dictionary of Paul and His letters, Inter Varsity Press, England 1993.
3. புனித சின்னப்பர் விவிலிய நிலையம், அப்போஸ்தலா பணி பூந்தமல்லி 1984.
4. தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு, விசுவாசத்தின் புதிய விடியல், கொழும்பு — இலங்கை 1995.
5. யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு, புதுப் புனல் யாழ்ப்பாணம் 1994.
6. திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர், தவக்கால திருமடல் 1999.

# யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் இலக்கும் அதன் தாக்கங்களும் (மார்ச் 1994)

திரு. ஏ. எஸ். அகஸ்ரின்
4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(இளைப்பாறிய ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி.)

## முன்னுரை:

பல உள்ளங்களில் நீறு பூத்த தணலாகவும் அவ்வப்போது வேறுபட்ட உணர்வுப் பிழம்புகளை எழுப்புவனவாகவும் மறந்தும், மறவாமலும் நிலை கொண்டுள்ள யாழ். மேய்ப்புப்பணி மாநாடு பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியும் இந்த நூற்றாண்டு முடிவுக் கட்டத்தில் அலசிப் பார்ப்பது பொருளுடையதும் பயனுடையதுமாகும்.

மீட்புப்பணி தொடரத்தக்கதாக இயேசு ஒரு புனித அமைப்பை இராயப்பர் தலைமையில் நிறுவினார். உலகெங்கும் சென்று நற் செய்தியை அறிவியுங்கள் என இடப்பட்ட அழைப்பை திருச்சபை யானது சுமுத்திரையாக மேற்கொண்டு விசுவாசிகளை ஞானத்திலும், விசுவாசத்திலும் உறுதிப்படுத்தி இற்றை வரை செயலாற்றிக் கொண்டு வருகிறது.

''உன் பெயர் பாறை. இந்தப் பாறையின் மேல் என் திருச் சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா'' (மத். 16 : 18) என இராயப்பரைப் பார்த்து இயேசு கொடுத்த வாக்குறுதி காலாகாலமாக பேணப்பட்டுக் கொண்டே வருகிறது. வரலாற்றுப் பாதையில் சமுதாயங்களில் ஏற்பட்ட மாற் றங்கள் வளர்ச்சிப் படிகள் ஏராளம். இவைகளினால் பல பிரச்சனை களையும், சவால்களையும் திருச்சபையும் சந்திக்க வேண்டியிருந்தது. மேலும் அவை முடிவான தீர்வைக் கொண்டவையாகவும் இருக்கப் போவதில்லை. ஏனெனில் புதிய சிந்தனைத் திருப்பங்கள் வந்து கொண்டே இருக்கிறது. அதற்கு திருச்சபையும் ஈடு கொடுக்க வேண்டி யிருக்கிறது. இதனால் இலட்சியப் பயணங்கள் தளர்ச்சியடையவும், வழி பிறழ்ந்து செல்லவும் வாய்ப்புகள் ஏற்படுவது சகஜம் தான். ஆனாலும் ''நான் என்றென்றும் உங்களோடு இருப்பேன்'' (மத். 28:20) என்ற இறைவனின் அருள்வாக்குப் பிரகாரம் திருச்சபைக்கு வலு வும், உறுதியும் தூய ஆவியின் மூலம் நிறைவாகக் கிட்டிக் கொண்டே

வந்திருக்கிறது. எதிர்ப்புகளையும், சோதனைகளையும் மேற்கொண்டு திருச்சபை தனது பயணத்தைத் தொடர்ந்தே வருகிறது. இதற்குத் திருச்சபையின் வரலாறே சான்று.

திருச்சபையின் வாழ்க்கைப் பயணத்தில் சோர்வுற்றுத் துவண்ட காலங்களில் அவ்வப்போது இறை ஆவியின் ஏவுதலால் சங்கங்கள் கூட்டப்பட்டு வழிமுறைகளும், நடைமுறைகளும் தீர்மானிக்கப்பட்டன. இற்றைவரை 21 பொதுச் சங்கங்கள் கூட்டப்பட்டுள்ளன. தவிர, பிராந்திய ரீதியிலும் சங்கங்கள் கூடின. இவை எழுச்சியையும் விழிப் புணர்வையும் கொடுத்து உயிரோட்டமான மறுமலர்ச்சியைத் தோற்று வித்தன.

இவ்வரிசையில் நிகழும் 20ஆம் நூற்றாண்டில் திருச்சபை புத் துயிர் பெறவும் புத்துணர்வுடன் செயலாற்றவும் தக்கவாறு 1962-65-ம் ஆண்டுகளில் 2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கம் நிகழ்வுற்றது. சனநாயகக் கோட்பாடுகள் வலுவடைந்துள்ள காலத்தில் அதிகார பீடத்தினாலோ அல்லது ஒரு சார்பினராலோ நிர்ணயிக்கப்படும் தீர் மானங்கள், உருவாக்கப்படும் திட்டங்களும் அனுசரிப்புகளும் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்ற அடிப்படைக் கோட்பாட்டை திருச் சபை மதித்தது. எனவே இச்சங்கம் உலக மக்கள் அனைவரினதும் பிரதிநிதித்துவத்தையும் அளித்து அவர்களது பலவித மரபுகள், கலாச் சாரங்கள், எண்ணங்கள் என்பவற்றிற்கு உரிய மதிப்பையும் பெற வாய்ப்பையும் கொடுத்தது. எனவே இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க சங்கமம் என அழைக்கப்படுகின்றது. இச் சங்கம் திருச்சபையினது உள்வாழ்வை ஆராய்ந்தது மாத்திரமன்றி அது உலகுடன் கொண்டி ருக்கும் உறவுகளை விசாலப்படுத்தக்கூடிய வழிவகைகளையும், நெறி முறைகளையும் வகுத்தளித்துள்ளது.

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரைகள் அடங்கிய 16 கொள்கைத் திரட்டுகளும் திருச்சபைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு களாகும். கடந்த பல ஆண்டுகளாக திருச்சபையின் வாழ்வை நிர்ண யித்து நெறிப்படுத்தி வந்தது இச்சங்கத்தின் அறிவுரைகளும் தத்துவக் கொள்கைகளுமேயாகும்.

## யாழ். மேய்ப்புப் பணி மாநாட்டிற்கான அவசியமும் ஆயத்த ஏற்பாடுகளும்

திருச்சபையைப் புதுப்பிக்கும் நெறிமுறைகளைப் பொதுச்சங்கம் ஆராய்ந்து வெளியிட்டதைத் தொடர்ந்து ( 1970 ) இலங்கையில் ஒரு தேசிய மறைப்பணிச்சங்கம் நடைபெற்றது. அதன் பின்னர் இரண்

டாவது நிகழ்வாக இன்னும் ஓர் தேசிய மேய்ப்புப்பணி மகாநாட்டைக் கூட்டுவதற்காக விடப்பட்ட ஆயர் பேரவையின் மடலின் ( 25-1-93 ) வழி நின்று யாழ். ஆயர் இ. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும் யாழ். தலத்திருச்சபையிலும் மேய்ப்புப்பணி மாநாட்டைக் கூட்டுவதற்காக 22-09-93 இல் விடுத்த சுற்றுமடல் மூலம் அறிவித்தல் கொடுத்தார். அம்மடலானது அது கூட்டப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நின்றது. அதில் அவர் குறிப்பிட்டதாவது "உலகளாவிய முறையிலும் நம் நாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் கடந்த நூற்றாண்டில் இடம்பெற்றுள்ளன. இம் மாற்றங்கள் எம்மறைவாழ்வில் பல சவால்களைக் கொண்டு வந்துள்ளன. போராட்டங்களும், நாடுகளின் பிரிவினைகளும், அகதிகள் - இடம்பெயர்ந்தோர் பிரச்சனைகளும் ஒழுக்கச் சீர்குலைவுகளும், வறுமையும் மட்டுமீறிய தன்னலப் பற்றும் என்று இவ்வாறாக, விடைகள் காண்பதற்குச் சிக்கலான பல வினாக்கள் நம்முன் நிற்கின்றன. இவற்றிற்கெல்லாம் தீர்வு காணவேண்டுமெனின் கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை ஆழப்படுத்தி எம்மையும் எமது பணிகளையும் மதிப்பீடு செய்து சீர்ப்படுத்துவது இன்றியமையாததாகும். இன்றைய சவால்களையும் நற்செய்திப் பணிக்கான வாய்ப்புக்களையும் சீர்தூக்கிப் பார்த்து வரப்போகும் ஆண்டுகளில் திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் கைக்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களைத் தூய ஆவியின் வழிநடத்துதலில் கண்டறிதலே இம் மாநாட்டின் நோக்கமாகும்."

யாழ். மறைமாவட்டத்தின் 'ஒரு பெந்தக்கோஸ்தே' என்று வர்ணிக்கப்பட்டதும் 1994 மார்ச் 8 - 14 வரை நிகழ்வுற்றதுமான இந்த மேய்ப்புப்பணி மாநாடு ஒரு மாபெரும் மறை அனுபவமேயாகும். இதனைப்பற்றி மாநாட்டின் உயிர்நாடியாய் விளங்கிய யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் S. J. இம்மானுவேல் அடிகளார் பணி அமர்வுத் தொடக்கத்தில் விழிப்புரை ஆற்றிய போது குறிப்பிட்டதாவது. " 2ஆம்வத்திக்கான் பொதுச் சங்கத்தின் முக்கிய எதிரொலியான மனமாற்றம், கண்ணோட்டமாற்றம், திசைமாற்றம் என்பன போதியளவு எமது தலைத்திருச்சபைத் தலைவர்களையும், விசுவாசிகளையும் கவரவில்லை; முன்னெடுக்கவுமில்லை. சுருங்கக்கூறின் உலக ரீதியிலே உலாவிய ஆவியின் கொடைகள் நமது மண்ணில் வீழ்ந்தபோதும் போதியளவு நம்மைத் தூண்டவில்லை. அக்கொடைகளை நாம் இனம் கண்டு கொள்ளவில்லை. ஆவியினால் ஏவப்பட்ட ஆழமான சில மாற்றங்கள் நமது தலத் திருச்சபையைப் பொறுத்தமட்டில் உள்வாங்கப்

படவில்லை. ஆகையினால் இம்மாநாடு யாழ். தலத்திருச்சபையின் 2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் திசைமாற்றத்தை ஆழப்படுத்துவதாகும்.''

ஆய்வுக்கென எழுதப்பட்ட ஏடுகள் மாநாட்டு விவாதத்தின்பின் 'புதுப்புனல்' என்ற நூலாக 1994 இல் வெளியிடப்பட்டது. இம் மாநாட்டில் விவாதித்தவை, பரிந்துரை செய்யப்பட்டவை பற்றியும் அவற்றின் விளைவுகள், பெறுபேறுகள், தாக்கங்கள், சமுதாயத்தில் அதன் பதிவுகள் என்பவை பற்றியும் இந்த 2000 யூபிலி ஆண்டுத் தருணத்தில் ஆராய்தல் பயனுடையதாகும். மேலும் இம்மாநாடு நிகழ்ந்து 5 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இக்காலத்தில் மக்களைப் பெரிதும் பாதித்து வாட்டிய பாரிய இடம்பெயர்வும், சொல்லொணா அவலங்களும். இவை காரணமாக மாநாட்டின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல இயலாதிருந்த நிலையும் யாழ். திருச்சபைக்கு ஒரு அங்கலாய்ப்பை ஏற்படுத்தியது. எனினும் இந்தச் சூழ்நிலையானது புதுப்பித்தலுக்கும் பகிர்தலுக்கும் தகுந்த களமாக அமைந்திருந்தது விசுவாசத்தில் ஊன்றி இறைபராமரிப்பில் தஞ்சம் புகுந்து அமைதி பெறவும் உதவியது என்றே கூறலாம்.

## பரிந்துரைகளும் செயற்பாடுகளும்

### 1. கிறிஸ்துவிலும் ஆவியிலும் உயிரூட்டம் பெற வேண்டிய இறைமக்கள்

மக்கள் மத்தியில் சிறப்பான இறைமக்களாக அழைக்கப்பட்ட பொதுநிலையினர் விசனத்துக்குரிய விதமாக மிகவும் மந்த நிலையில் வாளாவிருக்கும் நிலையிலிருந்து விடுபட வேண்டும். இதற்கு இறைவார்த்தையிடமும், கிறிஸ்துவிடமும் திரும்பிச் செல்ல வேண்டும். திருச்சபை ஏழை எளியோருடைய திருச்சபையாகவும் ஒடுக்கப்பட்டவரின் திருச்சபையாகவும் மாறவேண்டும். இங்ஙனம் அமைய வேண்டிய சமுதாயத்தின் மலர்வுக்கு எளிய தாழ்ந்த மனநிலையும், அன்பு, நீதி, இரக்கம் போன்ற விழுமியங்களில் உறுதியான நிலையும் இன்றியமையாதன. இயேசுவுடன் இணைக்கப்பட்ட நம் மீட்பைப் பற்றி தெளிவாக அறிந்து மக்கள் மத்தியில் நிலவும் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு என்பவற்றின் குறைபாடுகளை குணமாக்க விழிப்புடன் செயற்படுதல் அவசியமாகிறது. நீதியின் அடிப்படையில் உண்மைக்குக் குரல் கொடுப்பது அநீதியைக் கண்டிப்பது. தீமையை எதிர்த்துப் போராடுவது. அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவம், சமாதானம் போன்றவற்றை எல்லா இடங்களிலும், எல்லா வேளை

களிலும் நிலைநாட்டுவது நமது தலையாய கடமை. இந்த அழைக் கப்பட்ட நிலையை அடைய வலிமை அளிப்பது இறைவார்த்தை. இதுவே ஆன்மாவுக்கு உணவாகவும் ஞான வாழ்வுக்கு தூண்டுதலாக வும் திகழுகிறது திருச்சபையின் மறுமலர்ச்சி இறைவார்த்தையிலி ருந்தே தோன்றுவதால் அதற்கு போதிய முக்கியத்துவம் அளிப்பது மிகவும் இன்றியமையாதது.

திருச்சபையின் புனிதத்துவம் அதன் உறுப்பினர்களின் அன்பு வாழ்வின் விசாலத்திலேயே தங்கியிருக்கிறது. இதன் மட்டில் நாம் எவ்வாறு முன்னேற்றம் கண்டுள்ளோம் என ஆராயவேண்டும்; ஆவன செய்யவேண்டும்.

## 2. புதிய நோக்கில் திருச்சபையின் வாழ்வும் நமது உலகும்

இறைவார்த்தை நமது கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் வாழ்விற்கும் ஊற்றாயிருக்கிறது. உந்து சக்தி கொடுக்கிறது. அது அனைத்திற்கும் அடிப்படையானது. தனிப்பட்ட வாழ்வில் தேவைப்படும் முழுமனித விடு தலைக்கும் சமூக வாழ்வில் தேவைப்படும் பொறுப்புணர்வுக்கும் இறை வார்த்தையை அல்லும்பகலும் தியானித்தல் இன்றியமையாதது (சங்.1;2)

இறைவார்த்தையைப் பகிர்ந்து வாழத் தடையாக, குடும்பங் களில் நிலவும் சண்டை, சச்சரவுகள் ஒருபுறமிருக்க வேதாகமம் எல் லோர் கைவசமும் எட்டக்கூடிய தன்மை மிகக் குறைவாகவே உளது. இதற்கு ஆர்வமின்மை, அதிகவிலை, திருத்திய தமிழ்ப் பதிப்பு அருந்தல் காரணங்கள் எனக் கூறப்பட்ட போதும் தனிப்பட்ட முயற்சி எப் போதும் பயனளிக்காது விடாது.

வழிபாடும் வாழ்வும் என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப் பட்ட செய்தியாகும். இது பற்றிய நடைமுறைகள் முன்னெடுக்க எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. காலப் போக்கில் திருப்திகர மான ஈடுபாடும் அதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வும், வாழ்வு முறை களும் ஏற்படக்கூடியவாறு மாநாட்டின் பரிந்துரைகள் பயனளிக்கவில்லை மறைக்கல்விப் பாடத்தின் முக்கியத்துவம் உணரப்படாமையே பல பின்னடைவுகளுக்குக் காரணமாகும். மறைக்கல்விதான் வாழ்க்கை முறைகளைச் சீராக அமைக்க உதவும். இக்கல்வியில் ஒழுங்கான செயற்பாடு வெவ்வேறு காலகட்டங்களில் பலவித சூழ்நிலைகளினால் தடைப்படுவதும் அவற்றை அகற்ற எடுக்கும் நடவடிக்கைகளும் ஒரு வித போராட்டமேதான். இதற்குப் பெற்றோரும், ஆசிரியர்களும் தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவார்களாயின் நிறைவான பலனைப் பெறக்கூடியதாகும். திருச்சபைக்குத் தேவை குழுமவாழ்வு. அதில்

தான் சகோதரத்துவம் பேணப்படும். நான், எனக்கு என்ற அகந்தை அருகி அழிந்துபோகும். இதற்காகிய திட்டங்கள் கைமேல் பலனளிக்காது போகினும் விடாது முயலுமிடத்து குறிக்கோளை அடைய முடியும். அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு அறிவியல் என்பன மானிட வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் முதலிடம் வகிக்கும் அடிப்படைக் கூறுகள். திருச்சபை இத்துறைகளில் நற்செய்தியையும் அதன் விழுமியங்களையும் அறிவிப்பதன் மூலம் அவற்றை மீட்பின் வழிக்கு இட்டுச்செல்ல வேண்டிய கடப்பாடுடையது. "உலகெங்கும் சென்று நற்செய்தியினை அறிவியுங்கள்" (மத். 16: 5) எனும் கூற்றிலிருந்து நம்மேல் சுமத்தப்பட்டுள்ள கடமை புலனாகிறது.

மனிதனுக்கு சமூகவாழ்வு முற்றிலும் இன்றியமையாதது. இவ்வாழ்க்கை மற்றவர்களோடு கொள்ளும் தொடர்பினாலும், சகோதர உரையாடலாலும், தன் திறமைகளை வளர்ப்பதினாலும் வாழப்படுகிறது. இது சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் வாழப்பட்டு கிறிஸ்துவில் புதுப்பிக்கப்படவேண்டும். அப்போது தான் திருச்சபை சமுதாயத்தில் ஒரு புளிக்காரம் என்ற வார்த்தை பொருளுடையதாகும்.

வறுமை, தொழில் வாய்ப்பின்மை, அனாதைகள் விதவைகள் பிரச்சினை, ஒழுக்கச் சீர்கேடு, மனித உரிமை மீறல்கள்; முதியோர் பராமரிப்பின்மை என்ற பலவிதமான சமுதாயப் பாதிப்புகள் மாநாட்டின் முக்கிய கவனத்தைப் பெற்றிருந்தன. தனியாகவும், கூட்டாகவும் அமைப்புகள் ரீதியாகவும் இவைகளுக்கு பரிகாரம் தேட வழிமுறைகள் முன்வைக்கப்பட்டன. முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

பிறமதங்கள் பற்றி பரவலாக நிலவிய தவறான கருத்துக்கள் கண்டிக்கப்பட்டன. ஏனைய சமயத்தவர்களுடன் அன்பாக உரையாடவும், அவர்களில் காணப்படும் அறநெறிப் பண்புகளை உள்வாங்கவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். மேலும் அன்னிய நாட்டுப் பழக்க வழக்கங்களில் ஊறிவிட்ட நாம் அவற்றிலிருந்து விலகி நம் நாட்டுக்குரிய இன, மொழி, பண்பாடு, கலாசாரங்களுக்கு ஏற்ப வாழவேண்டும். அப்போது தான் சமுதாயத்தில் நாமும் நமது திருச்சபையும் உரிய இடத்தைப் பெறமுடியும்.

### 3. கிறிஸ்தவ அமைப்புக்கள்

'கிறிஸ்துவின் ஞான உடலைக் கட்டி எழுப்புவதில் உறுப்புகளுக்குள்ளும், பணிகளுக்குள்ளும் வேறுபாடுகள் பல உண்டு. ஆனால் ஆவியானவர் ஒருவரே. அவர் தம்முடைய நோக்கிற்கும் பணி

களின் தேவைகளுக்கும் ஏற்ப திருச்சபையின் நலன் கருதி வெவ்வேறான தமது கொடைகளை வாரி வழங்குகின்றார்.' (1 கொரி. 12: 8 - 12) மேலும் மத்தேயு 5ஆம் அதிகாரத்தில் ''உலகிற்கு உப்பு நீங்கள்'' ''விளக்கைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்கமாட்டார்கள்.'' ''உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக'' எனும் வாக்கியங்கள் மேலும் மேலும் வாசித்துத் தியானித்து செயற்பட வேண்டிய தேவையை எடுத்துரைக்கின்றது

ஆயர், குருக்கள், துறவியர், பொது நிலையினர் சகலரும் இணைந்ததே திருச்சபை. எனவே திருச்சபையின் புதுப்பித்தல் என்பது ஒரு சாராருக்கு மட்டுமல்ல. அது சகல தரப்பினருக்கும் அவரவர் நிலைக்கேற்ப நிகழவேண்டும். ஆயர், குருக்கள், துறவியரின் பிரமாணிக்க சேவையும் குழும செயலாற்றலும் தம்மில் கிறிஸ்து எனும் மேய்ப்பனை பிரதிபலிப்பதாக இருக்கிறது என்ற கருத்து உறுதி பெறவேண்டும்.

துறவியரது அயராத உழைப்பும், சேவையும் யாழ் திருச்சபையின் வளர்ச்சியில் ஆற்றிய பங்கின் சிறப்பை இச்சபை பாராட்டியது. இப்பாராட்டுதல் வெறும் திருப்திக்காக அல்லாமல் மேலும் பணிபுரிவதற்கான அழைப்பே என்று ஏற்குமாறு வேண்டுகோளும் விடுத்தது.

குருக்கள் துறவியரிடத்தில் காணப்பட வேண்டிய எளிமையையும், தூய்மையையும் பற்றி அதிகம் அதிகமாக வலியுறுத்தியதானது அதன் காத்திரம் எவ்வாறாக உணரப்படவேண்டும் என்பதைக் காட்டி நிற்கிறது 1983 தொடக்கம் தொடர்ந்து வரும் போர் இவர்களுக்கு தமமை உற்று நோக்கும் தன்மையை ஏற்படுத்தவும் செய்யப்பட வேண்டிய சேவையை வலியுறுத்துவதாகவும் அமையவேண்டும் என சபை கேட்டுக் கொண்டது. மக்கள் அனுபவிக்கும் இழப்புகள், மாறா வடுக்கள், உளநெருக்கீடுகள் என்பன இவர்களைத் தொடவேண்டும். அவை சொல்லும் செய்தியையும் கேட்க வேண்டும். அப்போது தான் புதுப்பித்தல் நிகழும் அன்பும், அமைதியும் நிறைந்த சமூகம் பிறக்கும்.

அழைத்தல் குருக்கள், துறவியருக்கு மட்டுமே என்ற போக்கும், தம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மைகளும், குருக்களின் அணுகுமுறைத் தாக்கங்களும், ஒதுக்கப்படுதலும் பொதுநிலையினர் தமது

அழைப்பை உணராமல் இருப்பதற்கான காரணங்களாகலாம். திரு நிலையினரை ஆள்வோராகவும், பொது நிலையினரை ஆளப்படுவோராகவும் கணிக்கப்பட்டு வந்ததை வத்திக்கான் 2 குறிப்பிட்டு அவர்களுக்குரிய இடத்தை மீளவும் கண்டு பிடித்துள்ளது. இதனையே இம் மாநாடு வலியுறுத்தி நின்றது. இதன் முன்னேற்றம் எவ்வளவாக உள்ளது என்பது இரு பகுதியினரும் தம்மையே கேட்டுக் கொள்ள வேண்டிய வினாவாகும். பொதுநிலையினரில் அடங்கும் குடும்பங்களும், இளைஞர், யுவதிகளும் வழிகாட்டப்பட்டு உருவாக்கம் பெற திருச்சபை வாய்ப்புகளைக் கொடுத்து வந்தது. அவை போதுமானவையாக இல்லை என்பதன் அறிகுறிகள் காணப்பட்டன. எனவே தான் இந்த மாநாட்டில் இளைஞர் மட்டில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## 4. பங்கு அமைப்பும் குழும வாழ்வும்

இயேசுவின் தாரக மந்திரம் அன்பு. "நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்" (அரு. 13 : 34), "தம்முடையவர்கள் எல்லோரும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்றும் செபித்தார்" (அரு. 17 : 11) எனும் வேதாகம வாக்கியங்கள் இறை இயேசுவின் தணியாத தாகத்தை வெளிப்படுத்துகின்றன.

'பங்கு' என்று அழைக்கப்பட்டு வந்த பழைய அமைப்புக்கு உயிரூட்டம் கொடுத்து புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக மாற்ற இம்மாநாடு சிபார்சு செய்துள்ளது. இதில் குழும வாழ்வும், பணியும் முக்கிய இடம் பெற்று பகிர்தல் வாழ்வுக்கும் அதன் மூலம் புதுப்பிக்கப்பட்ட சமூகத்திற்கும் வழிசமைக்கப்பட்டுள்ளது.

## 5. திருச்சபையும் அதன் நிறுவனத்தன்மையும்

திருச்சபை அநேக சந்தர்ப்பங்களில் நிறுவன அமைப்பாக இயங்க வேண்டியிருக்கிறது. இயேசு ஓர் அன்புச் சமூகத்தை ஏற்படுத்தினார். "பணிசெய்ய பன்னிருவரை அழைத்தார்" (மத். 10 : 1 – 14). "இக் குழுவிலிருந்து இராயப்பரைத் தெரிந்து அவரை அதன் தலைவராக நியமித்தார். (அரு. 21 : 15 - 17). இந்த அன்பின் அமைப்பு கிறிஸ்துவின் வார்த்தைக்கும் ஆவியானவரின் உந்துதலுக்கும் ஏற்ப பணிபுரியுமாறு ஏற்படுத்தப்பட்டதாக உள்ளது என்பது தெளிவாகிறது. இந்த

அமைப்பானது ஆளும் நிலையினராகக் கருதப்படும் திருநிலையினருக்கு மட்டுமே உரியதாகாது என மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இதனை மாநாடு அதன் அமர்வுகளிலும் வெளிக்காட்டியது. இந்த அமர்வுகளில் பொதுநிலையினருக்கு ஏறத்தாழ 60 விழுக்காடு இடம் ஒதுக்கப்பட்டு திருச்சபையில் அவர்களுக்கு உள்ள இடத்தைக் கண்டறிய கொடுத்த வாய்ப்பிலிருந்து மாநாட்டின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதலிலுள்ள நம்பகத்தன்மை உணரக்கூடியதாகும்.

## முடிவுரை

மாநாட்டின் நிறைவுப் பேருரையில் அருட்திரு S. J. இம்மானுவேல் அடிகளாரின் ஆதங்கத்தை இங்கு குறிப்பிடல் சாலப் பொருத்தமாகும்.

"காற்றும் தணிவதாயில்லை; அலையும் ஓய்வதாயில்லை; நேற்று இருந்தது போல்தான் இன்றும் இருக்கிறது. இன்று இருப்பது போலவே நாளையும் இருக்குமோ? நாம் அறியோம். இறைவா நீர் எம்முடன் இருப்பின் யார்தான் எமக்கு வேண்டும்."

மேய்ப்புப்பணி மாநாடு என்ன செய்துவிட்டது என ஆங்காங்கே குரல்கள் ஒலிக்கத்தான் செய்கின்றன. புதுப்பித்தலை தன்னிலிருந்து பிறப்பித்து செயற்படாது அது வெளியிலிருந்து தன்னை வந்தடைய வேண்டும் என எதிர்பார்ப்போரின் அறியாமையை என்னென்பது, ஒருவன் தன்னைப் புதுப்பித்து பகிரும்போது தான் தன் சூழலிலும், திருச்சபையிலும் புதுப்பித்த சமூகத்தை காணவும் அனுபவிக்கவும் முடியும். இந்தப் புதுப்பித்தல் ஒரு தொடர் பயணம். மாநாட்டின் சிந்தனைகளுக்கு உருவம் கொடுக்க முயல்வோம். அவை நமக்குத் திசை காட்ட இடம் கொடுப்போம். உண்மை வழியை அறிந்து அமைதி காண்போம். புதிய வையகமே நமது குறிக்கோள் ஆகட்டும்.

## உசாத்துணை நூல்கள்

1. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

2. புதுப்புனல் (யாழ் மேய்ப்புப்பணி மாநாட்டு ஏடு 1994)

3. யாழ் ஆயர் சுற்றுமடல் 22—9—93

# SYNOPSIS

## The Passover of Christ and the human dignity

The feast of Passover is very closely linked with the liberation of the Israelites. In the beginning it was observed as a family celebration (Exodus 12:3-6). The eating of the Paschal lamb was a ceremonial act. The feast of the unleavened bread indicates the quick preparation for the journey. Though it was celebrated as a separated feast in the course of the history it was intergrated with the feast of the Passover. The pouring of the blood of the lamb on the altar was a sign of the salvation of the first born of the Israelites. The blood of Christ shed on the altar of the cross was meant for the salvation of the whole humankind.

The feast of Passover is being celebrated by the church in two levels: i) Historical,

ii) Sacramental.

Historically it is a remembrance of the deliverance of the Israelites which was perfected by the Passover of Christ on the cross.

Sacramentally the church celebrates daily the Passover of Christ in the sacrifice of the Mass.

The passover is the centre and the source of human liberation and dignity. It is the fountain of man's spiritual search and thirst. All over the world the human dignity is at stake. The sin of slavery is spreading and increasing in every corner. It is the Pascahl mystery of Christ which can redeem humankind and reinstate the lost human dignity.

Fr. J. Nicholas

# The Jubilee Year and Repentence

The main theme for this year of preparation dedicated to God the Father is repentence and reconciliation. The mind of man is searching for a meaning in life God is the ultimate meaning in man's life, but man's worldly achievements and distorted vision blind him to this fact. It is only when a man realizes his weakness and worthlessness that he turns to God, as we see in the parable of the prodigal son. This son's story is the story of every sinner. Though the sinner may reject him, God sends him the grace of repentence.

The present day man is so immersed in iniquity that he has lost the sense of sin. His conscience has been unformed or become distorted. His actions are based on personal preferences and experiences rather than the law of God. He has built an imposing world of technology but has become entangled in his own creations and is unable to free himself, hence the need to turn to God for help. God in his mercy provides ways and means for the sinner's return. To be reconciled to God man must repent and seek him in all humility.

As the sacrament of penance has been instituted by our Lord for the forgiveness of sins, it is essential that everyone receives it in this year of spiritual renewal. While seeking forgiveness from God we must also be reconciled to our neighbour. Not only individual sins but sins of society too must be resolved and healed. A return to God is a precondition to such a healing.

Miss Violet Emmanuel

# Catechetical Education and Growth in Faith

Life and faith are mutually related. They are inseparable. Hencea christian's life and faith are intimately connected. St. John 3 : 16 confirms this when he says : "He who believes in the son has eternal life". Christian life simply means living the life of Christ. It is a life experience. St. Paul beautifully describes this in Galatians 2 : 20 when he says : "I live now, not I, but Christ lives in me".

The foundation for this life is faith. We see this in practice especially in the lives of the people who have been close to God from Abel through Noah, Abraham, Moses, Mary, Apsotles and the saints. The experience of journeying together with God exemplifies their lives. Hence religious instruction has to meet and fulfil this life situation and experience. It must be closely connected with one's daily life and not remain purely theoretical. Catechetical instruction can be effectively done only by sharing and imparting one's faithfilled religious living and experience with others. Ou past and present religious experience provide a powerfu incentive source for the strengthening, growth and education of our future christian life.

**Sr. Lomina Paul Rajah, H. F. B.**

# Family is a Loving Community

Christian family is a basic unit which is built on the Word of God. This family is called to be a loving and sharing community in the society. In the Old Testament there were three kinds of families namely; nuclear family, extended family and patriarchal. They were living as a loving and sharing community. In the New Testament we see the models of Early Christian communities. They were living an exemplary life and the other families also followed them. This is portrayed in Acts 2: 42-47. The Church insists that the present families are also expected to have the same qualities which the Early Christian communities had in their life. St. Paul has also written about this loving and sharing community in his epistles (Gal 6:10; Eph. 2:19). He insisted more on the family of faith and love.

**Family is like a mini church**

In this mini church father, mother, and the children have a close relationship with one another and the important role to build this mini church. In order to enhance the relationship and the important role they have to play, the couples must be prepared well before the marriage. This family must be the witness to christian values in the society. Further all the families which are journeying towards the year 2000 will have to fulfil the aim of the church and to be the true loving and sharing community in the society.

Bro. S. VASANTHAKUMAR

# St. Paul and Basic Christian Community (ANPIAM)

Today the Church is on the threshold of the third millennium. As we approach the year 2000, we are also preparing ourselves to survey again, in an in - depth manner, the great historical event of the incarnation of Jesus Christ.

Christianity is a way of life. From the time of Jesus even up to the latter period of early Christianity, it remained as a community and not as individuals. Its aims were to live a life of sharing, bearing and caring. To reach its goal, some forms of Basic Christian Community living have emerged in different parts of our country with the name of "ANPIAM" (அன்பியம்). It is a genuine place for such an encounter because the members accept, reflect on, assimilate and live the incarnated word in their local communities, and make God's message meaningful. But today these communities remain on the periphery and have not taken root among the people, because a lot of challenges are awaiting us and we are not bold enough to face them.

In making our Basic Christian Communities actively relevant to the concerns of our people, Paul's newly founded communities can serve as models for the people who participate in the B. C. C' S, and Paul himself as a model for the priests, religious and others who are called to be their animators.

M. M. Gnanendran

# Jaffna Diocesan Pastoral Convention : Its aim and impact

Vat. II after much deliberations and serious work introduced many changes for the renewal of the Church.

Even after 35 years the people in our land were not fully attuned to realize its benefits.

Therefore the Jaffna Church, as a forerunner to the National Pastoral Convention, convened the Jaffna Diocesan Pastoral Convention, on this theme towards 'Renewal Sharing Church.' The findings and recommendations are embodied in the Book 'Puthupunal' for adoption, reference and posterity.

The existing widespread yearning for better life and peace in our country and Church can be realized only by Renewal and Sharing through ways and methods recommended by the convention.

**Mr. A. S. Augustine**

"நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்."

(மத் 28: 5-6)



## எம் உளம் நிறைந்த
## உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்

- அல்லேலூயா